நல்லொழுக்க வினா? விடை

ஆசிரியர் :
கழகப்புலவர், சித்தாந்தபண்டிதர்
ப. இராமநாத பிள்ளை.

கழக வெளியீடு

கழக வெளியீடு : ௯அச

நல்லொழுக்க வினாவிடை

ஆசிரியர் :
கழகப்புலவர், குலசைத் திருவள்ளுவரகம்
சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition : Mar., 1951

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140, BROADWAY, :: MADRAS-1.

Head Office :

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.

பதிப்புரை

மேல்நாட்டுக் கல்லூரிகளிலும் மேல்நாட்டாரால் நம் நாட்டில் நிகழ்த்தப்பெறும் கல்லூரிகளிலும் கடவுள் நெறியையும் ஒழுக்கத்தையும் போதிக்கும் நல்லொழுக்கப்பாடம் எல்லா மாணவர்களுக்கும் கற்பிக்கப்பெற்று வருகின்றது.

ஏனைய கல்லூரிகளில் பலசமய மாணவர்கள் பயில்வதால் எச்சமய நல்லொழுக்கம் கற்பித்தல் தகுதிஎன எண்ணி ஒன்றும் போதியாமல் இருந்துவிடுகின்றனர். அக்குறையை நீக்கவே எல்லாச் சமயத்தார்க்கும் பொதுவான ஒழுக்கங்களைத் தொகுத்து நல்லொழுக்க வினவிடை என்னும் பெயருடன் இந்நூல் வெளிவருகின்றது.

இதன்கண் எல்லாச்சமய அருளாசிரியர்கள் அருளிய பொதுநெறிக் கடவுட்பாடல்கள் அறுபதுக்குமேல் தொகுக்கப் பெற்றுள்ளன. அவற்றின் குறிப்புரையும் அருஞ்சொற் பொருளும் ஒவ்வொருபாட்டின் அடியிலும் தரப்பெற்றுள்ளன. தொகுக்கப்பெற்ற நூல்களின் அட்டவணையும் செய்யுள் முதற்குறிப்பும் சேர்க்கப்பெற்றுள்ளன. வினவிடை எளிய இனிய நடைவாய்ந்தது. ஒழுக்கமே ஒற்றுமையையும் வாழ்வையும் தரவல்லது.

பள்ளிதோறும் இதனைப் பாடமாக வைத்து முதலாம் படிவமுதல் ஆறாம் படிவம் முடிய மாணவர்கள் கற்றல் இன்றியமையாததெனக் கருதுகின்றோம்.

அரசினரும், பள்ளித் தலைமையாசிரியர்களும் தமிழாசிரியர்களும் இதனைப் போற்றுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

நல்லொழுக்க வினாவிடை

௧. கடவுள்

௧. கடவுளுண்மையை அறிவது எப்படி?

நம்முடைய உடலையும் நாம் வாழும் உலகத்தையும் கொண்டு அறியலாம்.

௨. உடலைக்கொண்டு அறிவது எப்படி?

உடல், மெய் வாய் கண் மூக்கு செவி முதலிய பலவுறுப்புக்களால் ஆக்கப்பட்டது. அவற்றைப் படைத்தருளிய கடவுள் ஒருவர் உண்டு என அறியலாம்.

௩. ஏன், அவை தாமாக உண்டாகியிருக்க முடியாதா?

ஆக்கப்படுவதெல்லாம் செயப்படுபொருளே; செயப்படுபொருள் தொழில் செய்வோனல் (ஒருவினைமுதல்) செய்யப்படுவதாம்; அதனல் தாமாக உண்டாகி யிருக்க முடியாது.

௪. அதற்கு ஏதாவது ஒப்புக்காட்ட முடியுமா?

முடியும்; நாம் படிக்கின்ற புத்தகம், வாழ்கின்ற வீடு இவற்றைப் பிறர்தானே ஆக்கித்தருகின்றார்கள். புத்தகமும் வீடும் தாமே ஆகின்றனவா? இல்லையே; அவற்றைப்போலவேதான் உடலும். இவையே காட்டக் கூடிய ஒப்பு.

௫. நாம் ஓடல் ஆடல் படித்தல் முதலியவற்றைச் செய்வது போல உடலும் தானாக உண்டாகியிருக்கக் கூடாதா?

கூடாது. ஏனென்றால், நாம் என்றால் உயிர். உயிர்க்கு (நமக்கு) அறிவு இருக்கிறது. அறிவுடைய பொருள் கருதியபடி நடக்கும்.

௬. அப்படியானால் நம்முடைய உடலுக்கு அறிவு இல்லையோ?

உடலுக்கு அறிவு இல்லை.

௭. கடவுள் எப்படிப்பட்டவர்?

பேரறிவும் பேராற்றலும் பேரருளும் உடையவர்.

௮. கடவுள் இருக்கும் இடம் யாது?

அவர் எங்கும் நிறைந்திருக்கின்றார்; அவர் இல்லாத இடமே இல்லை.

௯. அவர் எதைப்போல் நிறைந்திருக்கின்றார்?

வான் என்று சொல்லப்பெறும் வெளி, எல்லாப் பொருள்களிலும், இடங்களிலும் நிறைந்திருப்பது போலவும், எள்ளின்கண் எண்ணெய் உள்ளும் புறம்பும் நிறைந்திருப்பது போலவும் நிறைந்திருக்கின்றார்.

௧0. கடவுளைக் கண்களால் காண முடியுமா?

கடவுளைத் தோன்றிமறையும் வடிவம் உடைய கல், மணல், இரும்பு முதலிய உலகப் பொருள்கள்போல் கண்களால் காண முடியாது.

௧௧. வேறு எப்படிக் காணலாம்?

கடவுள் அருள்நிறைந்த மெய் அன்பர்களுக்கு அவ்வப் பொழுது வெளிப்பட்டருளும் திருவருள் உருவில் காணலாம்.

கஉ. அந்தவகையான திருவுரு எத்தகையதென்று அறிவது எப்படி?

திருவருள் கைவந்த மெய்யடியார்கள் தாங்கள் கண்ட உண்மைகளைத் தீந்தமிழ்த் திருப்பாட்டாக அருளியுள்ளார்கள். அதன்கண் அறியலாம்.

கங. அவர்கள் அருளிய திருப்பாட்டுள் சிறந்து விளங்குந் திருவுரு யாது?

"ஆதியானை" உணர்தற்கரியதோர் சோதி. சோதி என்றாலும் ஒளி என்றாலும் ஒன்று.

கச. கடவுள் ஏன் ஒளிவடிவத்தில் தோன்றுகின்றார்?

ஒளியே இருளைப்போக்கிப் பொருளைக் காட்டும்.

கரு. இன்னும் ஒளியால் வரும் நன்மை யாது?

வேண்டிய அளவுக்கு வெப்பந்தந்து பொருளையும் உடம்பையும் வளர்க்கும்; படிக்க எழுத ஓட ஆடத் தொழில் செய்யத் துணையாகும்.

கசு. கடவுள் அதனால்தான் ஒளிவடிவில் தோன்றுகின்றாரோ?

ஆம். புறஒளி இருளைப்போக்குவதுபோல அகஒளியாகிய கடவுளும் நம்முடைய அறியாமையாகிய இருளைப் போக்குகின்றார்,

கஎ. கடவுளின் சிறந்த நிலை யாது?

அவருடைய பேரறிவும் பேராற்றலும் பேரருளும் தாமே விளங்குவன. பேரறிவை ஞானமெனவும், பேராற்றலைக் கிரியை எனவும், பேரருளை இச்சை எனவும் கூறுவர். அவர் பிறப்பு இறப்பு அற்றவர்; அவருக்கு ஒப்பானவர் யாவரும் இல்லை; அவரே எல்லாருக்கும் மேலானவர்; அவர் என்றும் ஒன்றுபோல் இருப்

பவர்; விருப்பு வெறுப்பு அற்றவர்; அவர் எல்லாப் பொருள்களையும் இயக்குபவர்; எல்லாப் பொருள்களும் நன்றாகத் தொழிலுறும்படி கடவுபவர்; எல்லாவற்றையும் கடந்து நிற்பவர்; முறை (நீதி) தவறாதவர்; பிழை பொறுப்பவர்; எளிதில் அன்பர்க்குக் காட்சி யருள்பவர், அவர் ஒருவரே.

கஅ. கடவுளுக்கு இவ்வுண்மைகளை விளக்கும் காரணப் பெயர்கள் உண்டா? உண்டாயின் கூறுக.

கடவுள் அறிவு தானேவிளங்குவதால் 'வால் அறிவன்' என்று அழைக்கப்படுவர்; எங்கும் நீக்கம் இன்றி நிறைந்திருப்பதால் 'இறைவன்' என்பர்; எல்லாவற்றையும் இயக்குவதால் இயவுள் என்பர்; எல்லாவற்றையும் கடவுவதால் 'கடவுள்' என்பர்; எல்லார் உள்ளத்தையும் கடந்து நிற்றலாலும் கடவுள் என்பர்.

கக. கடவுள் எவ்வாறு முறைசெய்கின்றார்?

கடவுள், தம் அருள்பெற்ற திருவள்ளுவநாயனார் போன்ற நீத்தார் வாயிலாக முறைநூலும் மறைநூலும் அருளிச்செய்துள்ளார். அவற்றின்படி நடப்பவர்க்குச் செல்வமும் சிறப்பும் அருளி இன்புறச் செய்வர். நடவாதவர்க்கு அவர், நன்னெறிக்கண் நடத்தற் பொருட்டு வறுமையும் நோயும் அகற்றாது அவற்றுள் அழுத்தித் துன்புறச் செய்வர்.

உ0. முறைநூலும் மறைநூலும் என்றல் என்ன?

முறைநூல் என்பது உலகியல் ஒழுக்கம் உணர்த்தும் அறநூல், அதுவே வேதம் எனப்படும். மறைநூல் என்பது கடவுள் உண்மை, உயிர் உண்மை, தளை உண்மை, கடவுள்வழிபாடு, கடவுட்பேறு, தளைநீக்கம் முதலிய

உணர்த்தும் மந்திரங்கள் நிரம்பிய அறிவுநூல். அதுவே ஆகமம் எனப்படும்.

உக. கடவுள் ஒளி வடிவம் அன்றி உருவடிவில் வரும்பொழுது எவ்வாறு வருவர்?

அம்மை அப்பராக வருவர்.

உஉ. அம்மை அப்பராக வருவது தனித்தனியாகவா? சேர்ந்தா?

தனித்தனியாக அன்று; சேர்ந்தே வருவர். அஃதாவது இடப்பக்கம் அம்மையும் வலப்பக்கம் அப்பனுமாக வருவர். அவர் பெண் உருவும் ஆண் உருவும் ஆகிய இரு வேறு உருவில் ஓர் உடம்பாய் வருவர்.

உங. அவ்வாறு வருவதற்கு அடிப்படையான காரணம் ஏதாவது உண்டா?

உண்டு. உலகிடைக் காணும் உயிர் உலவும் உடல்களெல்லாம் ஆண் பெண் ஆகவே அமைந்துள்ளன. அவ்வுடல்களை ஆண் பெண்ணாகப் படைத்து உயிர்கள் உய்ய அளித்தருளிய ஆண்டவனும் அவ்விருவேறு உருவும் ஓர் உடம்பிற்கொண்டு தோன்றியருள்வதும் பொருந்திய காரணமாம்.

உச. உடல்கள் இருவேறு பிரிவாக இயைந்ததன் நன்மை யாது?

உயிர்கள் ஒன்றோடொன்று இயைந்து ஒற்றுமையுற்று ஒன்றுக்கு ஒன்று உதவியாய் என்றும் பிரியாது இனம் பெருக்கி வாழும் வாழ்வாகும்.

"அன்னை அத்தனாய் அருளுருக் கொண்டு
முன்னறி தெய்வமாய் வருவன் முதல்வன்."

உ. உயிர்

க. உயிர்கள் உண்டு எனத் துணிவது எப்படி?

கடவுள் உண்மையினைத் துணிவதற்குக் காரணமாக இருந்த நம்முடைய உடல், உலகம், இவற்றைக் கொண்டேதான் உயிருண்மை துணிதல்வேண்டும்.

உ. அஃது எப்படி?

உயிருள்ள உடம்புதான் இயங்குகின்றது; இயற்று கின்றது. உயிர் இல்லாத உடம்பு செயலற்றுப் பிண மாய்க் கிடக்கின்றது. அதனால் உயிர் உண்டு.

ங. உயிர் ஒன்றா? பலவா?

உயிர் ஒன்றன்று; பல. ஒவ்வொரு உடல்தோறும் இருப்பது தனித்தனி உயிரே.

ச. ஏன், உயிர் ஒன்றாக இருக்கமுடியாது?

உலகத்தில் எல்லா உயிர்களும் ஒன்றுபோல் இன் புறவோ துன்புறவோ காணவில்லை. ஓர் உயிர் உண்டு இன்புறும்போது மற்றோர் உயிர் உணவின்றித் துன்புறு கின்றது. ஒன்று உழைக்கும்போது மற்றொன்று உறங்குகின்றது. ஒன்று படிக்கும்போது மற்றொன்று விளையாடுகின்றது. இப்படியே ஒன்றுக்கு ஒன்று இசைவில்லாமல் மாறுபட்டு நடப்பதாலேயே உயிர் ஒன்றாக இருத்தல் முடியாது. பலவாகவே இருத்தல் வேண்டும்.

ரு. உயிர்கள், உடல் உலகங்கள்போல் படைக்கப்பட்ட பொருளா?

இல்லை. கடவுள்போல் என்றுமுள்ள அழிவில்லாத அறிவுப் பொருள்.

௬. கடவுள் உயிர்களைப் படைத்தார் என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?

கடவுள், உயிர்கள் உய்வதற்காக அவ்வவ்வுயிர்களுக்குத் தக்கவாறு பலவகை உடம்புகளைப் படைத்துக் கொடுத்து அவ்வுடம்புகளுடன் சேர்த்து வைத்தனர் என்பதுதான்.

௭. அதற்கு ஏதாவது ஒப்பு உண்டா?

உண்டு. ஆசான் மாணுக்கருக்கு அறிவு கொடுத்தான். மருத்துவன் நோயாளிக்கு நலம் கொடுத்தான் என்பன. ஆசான் மாணுக்கருக்கு முன் இல்லாத அறிவைப் புதிதாகக் கொடுக்கவில்லை. உள்ள அறிவை மறைத்துக் கொண்டிருந்த அறியாமையை நூற் கல்வியாகிய செயற்கைக் கருவித் துணைகொண்டு அகற்றுகின்றான். அப்பொழுது மாணுக்கன் அறிவு விளக்கமுறுகின்றது. இதனையே அறிவு கொடுத்தானெனச் சொல்வது. இது போலவே, மருத்துவனும் நோயாளிக்கு முன் உள்ள நலம் நோயால் மறைந்து விளங்காமல் இருக்கின்றது; மருந்து கொடுத்து நோயை நீக்கி முன் உள்ள நலத்தை நோயாளியின்பால் விளங்கச் செய்கின்றான். இதனையே நலங்கொடுத்தானெனச் சொல்வது. இவையே ஒப்பென்க.

௮. உயிருக்குரிய பண்புகள் யாவை?

அறிவு ஆற்றல் அன்பு என்னும் மூன்றுமாம். இவற்றை முறையே (ஞானம், கிரியை, இச்சை) அறிவு, தொழில், விழைவு என்பர்.

௯. கடவுளுக்கு உரிய அறிவு தொழில் விழைவு மூன்றற்கும் உயிர்களுக்கு உரிய அறிவு தொழில் விழைவு மூன்றற்கும் உள்ள வேறுபாடு யாது?

கடவுளுக்கு உரிய மூன்றும் ஒருவர் விளக்க விளங்காது தாமே விளங்குவன. உயிர்களுக்குரிய அம்மூன்றும் கடவுள் கலந்து விளக்க விளங்குவன.

௧0. இவற்றிற்றுப் பெயரளவிலும் வேற்றுமை உண்டா?

உண்டு. கடவுளுக்கு உரிய அறிவைப் பேரறிவு என்பர். உயிர்களுக்குரிய அறிவைச் சிற்றறிவு என்பர். இதுபோலவே தொழிலுக்கும் விழைவுக்கும் கூறுவர்.

௧௧. உயிர்களுக்குக் கடவுள் உடம்பினைப் படைத்துக் கொடுத்த காரணம் யாது?

உயிர்களுக்கு முன்னமே நீங்கும் இயல்பாக அமைந்துள்ள ஒட்டுமலமாகிய மாசினைப் போக்க. இம்மலம் 'பண்டே புல்லிய மலம்' எனப்படும். (புல்லுதல் - தழுவுதல்.)

௧௨. இம்மாசு எல்லா உயிர்களிடமும் ஒன்றுபோல் ஒட்டியதா? வேற்றுமையுண்டா?

வேற்றுமையுண்டு.

௧௩. வேற்றுமை எத்தனை வகைப்படும்?

மூன்று வகைப்படும்.

௧௪. அம்மூன்று வகையின் விளக்கம் யாது?

நுண்மை மென்மை வன்மை எனக் கூறலாம். அம்மூன்றினுக்கும் ஓர் ஒப்புக்காட்டுவதாயின் வித்து முளை மரம் எனக் காட்டலாம்.

௧௫. இம்மல வேறுபாட்டால் உயிர்களின்நிலை வேறுபாடு உண்டா?

உண்டு. ஒருமலத்தர் இருமலத்தர் மும்மலத்தர் என உயிர்நிலை மூவகைப்படும்.

கசு. உயிர்களுக்கு உருவு உண்டா? ஆண் பெண் என்னும் பிரிவு உண்டா?

உயிர்களுக்கும் கடவுளைப்போல் கண்ணுக்குத் தெரியும் உருவமும், ஆண் பெண் பிரிவும் இன்று.

கஎ. ஆண் பெண் என்னும் பிரிவு எவ்வகையால் வந்தது?

உயிர்கள் சார்தற்கு ஆக்கப்பெற்ற உடம்புகளாலேயே ஆண் பெண் பிரிவு வந்தது.

கஅ. உயிர்கள் அடையவேண்டிய நிலை யாது?

மலமாகிய மாசு நீங்கி நிலைத்த நலமாகிய கடவுளுடைய திருவடியை எய்தி என்றும் இன்புற்று வாழ்தல்.

கக. இதற்கு உயிர்கள் செய்யவேண்டிய செயல் யாது?

ஒழுக்க இயலில் கூறியபடி ஒழுகவேண்டும். கடவுளிடத்துப் பேரன்பு கொள்ளல்வேண்டும். பெரியோரிடத்துப் பணிவு வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அருள்வேண்டும்.

உ0. உயிர்கள் உடம்போடுகூடி அறிவு விளக்கம் பெறும் முறையிலும் வேறுபாடு உண்டா?

உண்டு; ஓர் அறிவு முதல் ஆறு அறிவு முடிய ஆறு வகை உண்டு.

உக. இவ்வேறுபாட்டுக்குக் காரணம் யாது?

உயிர்கள் பெற்றுள்ள உடம்பின்கண் வெளிப்படையாகத் தெரியும் ஐம்பொறி விளக்கத்தால் ஐயறிவு என்றனர். நூலறிவு விளக்கத்தால் ஆறு அறிவு என்றனர்.

உஉ. ஆறறிவு உயிர்வகைகளை விளக்கிக் கூறுக?

அ. தொட்டால் அறியும் உடம்பு ஒன்றுமட்டும் உள்ள ஓர் அறிவு உயிர்—மரஞ்செடி முதலியன.

ஆ. தொடுதலும் சுவைத்தலுமாகிய உடம்பும் நாவும் என்னும் ஈர்அறிவும் உள்ளஉயிர்—நத்தை முதலியன.

இ. தொடுதலும் சுவைத்தலும் மணத்தலும் ஆகிய உடம்பும் நாக்கு மூக்கு என்னும் மூவறிவும் உள்ள உயிர்—கறையான் எறும்பு முதலியன.

ஈ. தொடுதலும் சுவைத்தலும் மணத்தலும் பார்த்தலும் ஆகிய உடம்பும் நாக்கு மூக்கு நோக்கு என்னும் நான்கறிவும் உள்ளவுயிர்—நண்டு தும்பி முதலியன.

உ. தொடுதலும் சுவைத்தலும் மணத்தலும் பார்த்தலும் கேட்டலும் ஆகிய உடம்பும் நாக்கு மூக்கு நோக்கு காது என்னும் ஐயறிவும் உள்ளவுயிர்—நாற்கால் விலங்குகள் முதலியன.

ஊ. மக்களாகிய நமக்கு மேற்குறித்த ஐம்பொறி அறிவுடன் நன்று தீது என்னும் வழிவகை அறியும் மன அறிவுகூடி ஆறு அறிவு உண்டு. அதனுல், நம்மை ஆறறிவுயிர் என்பர். மேலும் ஆறு என்பது வழி, அஃது இருவகைப்படும். தமக்கும் பிறர்க்கும் துன்பம்தரும் தீய வழியும், இன்பம்தரும் தூயவழியுமென. இவ்விருவழிகளையும் அறிந்து தீயவழியினின்றும் விலகித் தூய வழியில் செல்லுவதே ஆறு அறிவாகும் என்பதும் பொருந்தும்.

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே
ஆறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."

—தொல். பொருள். ௫அ௨.

௩. மலம்

க. மலம் என்பது யாது?

உயிர்களின் அன்பு அறிவு ஆற்றல்களை விளங்க ஒட்டாது மறைக்கும் வலிமை. வலிமை என்பது சத்தி; சத்தியை ஆற்றல் என்றும் கூறலாம்.

உ. மலம் எத்தனை வகைப்படும்?

மூன்று வகைப்படும்.

௩. அவை யாவை?

பழமலம் வினை மாயை என்னும் மூன்றுமாம். இவற்றை ஆணவம் கன்மம் மாயை எனவும் கூறுவர்.

ச. பழமலத்தின் தன்மை யாது?

பழமலம் ஒன்றாய் அளவில்லாத வலிமைகளையுடையதாய் உள்ளது.

ரு. அவ்வலிமைகளின் செயல் யாது?

அளவில்லாத உயிர்களின் அறிவைத் தனித்தனி மறைக்கும்.

சு. மறைப்பதால் உண்டாகும் தீங்கு யாது?

உயிர் தன் அறிவுவிளங்காது அறியாமை வயப்பட்டுத் தீமை செய்யும்.

எ. இதனை விளக்கக்கூடிய ஒப்பு யாது?

கண்ணின்கண் மாசுபடர்ந்த ஒருவன் பகலிலும் ஒளி விளங்காது வழிதெரியாது குழியில் விழுந்து இடர்ப்படுவன். அவன் நிலையே ஒப்பாகும்.

அ. வினை எத்தனை வகைப்படும்?

இருவகைப்படும்.

௯. அவை யாவை?

அவை நல்வினை தீவினை என்பன.

௧௦. அவற்றின் தன்மை யாது?

நோய் நீக்கும் மருந்துபோன்று உயிர்களின் அறியாமை நோயை நீக்கும் தன்மையது.

௧௧. நோய்நீக்கும் மருந்து இருவகையாக இருப்பது ஏன்?

உடல் நோய்க்குக் கொடுக்கும் மருந்து நோய் நிலைக்குத் தக்கவாறு பலவகைப்படும். அவற்றைப் பெரும்பான்மை பற்றி இனிப்பு கசப்பு என இருவகைப்படுத்தலாம். நல்வினையும் தீவினையும் முறையே இனிப்பும் கசப்பும் போன்றனவே.

௧௨. மாயை என்பது யாது?

உடல் உண்பொருள் உலகங்களுக்கு முதலாக உள்ளது.

௧௩. மாயையின் தன்மை யாது?

அறிவுள்ள உயிர் வினைசெய்தற்கும் பயன் துய்ப்பதற்கும் நிலைக்களமும் கருவியுமாக அமையும் தன்மையது.

௧௪. மாயைக்கு அறிவு உண்டா?

நம் அறிவு விளக்கத்திற்குக் கருவியாகிய சுவடிகளுக்கு அறிவு இல்லை. அதுபோலவே மாயைக்கும் அறிவில்லை.

௧௫. அறிவு இல்லாத மாயை நமக்கு உதவியாவது எப்படி?

அறிவு இல்லாத விளக்கு ஒளிதந்து படிக்க உதவுகின்றது. அதுபோன்று அறிவில்லாத மாயை கண்முதலிய பொறிவழியாகப் பொருள்களைக்கண்டு நன்மைதீமை அறிந்து அறிவுவிளங்கத் துணைசெய்கின்றது. அறி

வில்லாத கப்பல் கடலின் கரையடையத் துணைசெய்கின்றது. உடலும் பிறவிப்பெருங்கடல் கடந்து பேரின்பக் கரை அடையத் துணைசெய்கின்றது.

௧௬. மாயை எத்தனை வகைப்படும் ?

அழுக்குமாயை, அழுக்கில்மாயை என இருவகைப் படும்.

௧௭. இவற்றின் விளக்கம் யாது ?

மலம் வினை இரண்டுடன் விரவியது அழுக்குமாயை; இவற்றுடன் விரவாதது, தூய்மையாக இருப்பது அழுக்கில் மாயை.

௧௮. இவற்றிற்கு ஒப்பு யாது ?

முறையே அழுக்கேறிய கரிய ஆடையும், அழுக்கேறாத தூய வெள்ளையாடையும் ஆகும்.

௧௯. அழுக்கேறிய ஆடையால் வரும் தீங்குகள் யாவை ?

தோலைப்பற்றிய சொறி சிரங்கு முதலியவை உண்டாதல், தீநாற்றம் வருதல், பிறரால் அருவருக்கப்படுதல் முதலிய தீங்குகளாம்.

௨௦. அழுக்குமாயையால் வரும் தீங்குகள் யாவை ?

புறஅக உடம்பு முப்பத்தொரு மெய்க (தத்துவம்) ளாலாகியது. உலகமும் உண்பொருளும் பத்து மெய்க ளாலாகியது. இவ்வாறாக நின்று உயிர்கள் மயங்குவ தற்குத் துணைசெய்து அதனால், உயிர்கள் உண்மையறி யாது மயங்குகின்றனர். பிறப்பறப் பிறந்த உயிர்கள் பிறப்புறத்தக்க தீய வினைகளைச் செய்து துன்புறுகின்ற னர். தூயவினைசெய்யும் சான்றோர் கண்டு பரிந்து வருந்துகின்றனர். இவையே தீங்குகள் என்க.

ச. ஒழுக்கம்

1. கடவுள் வழிபாடு

க. கடவுள் வழிபாடு என்னும் மொழியின் பொருள் யாது?

கடவுளுக்குச் செய்யும் வணக்கம் எனவும், கடவுளருளால் ஆக்கப்பெற்ற முறைநூல் மறைநூல்களில் காணப்பெறும் வழிகளில் நடத்தல் எனவும் பொருள்படும்.

உ. இவ்வழிபாட்டின் சிறப்பு யாது?

எல்லா உயிர்க்கும் துன்பம் இல்லாத இன்பம் வரும் வழியில் நடந்து நாம் இன்புறுவது.

ந. இந்த இன்பத்திற்குக் கடவுள்வழிபாடு எப்படித் துணை செய்கின்றது?

கடவுளுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பும், கடவுள் நினைவும், அவரிடம் கொள்ளும் அன்பும் அச்சமும், அவர் நமக்குப் புரியும் அருளும் அன்பும அறமும் முதலாயின நம் உள்ளத்து இடையறாது நின்று நிலவி நாம் நன்னெறியில் செல்லத் துணை புரிகின்றது.

ச. இதற்கோர் ஒப்புக் கூறமுடியுமா?

உடன்பிறந்தார் உறவினர் மாணாக்கர் தோழர் நாட்டவர் முதலாயினர் ஒருவரோடு ஒருவர் அன்பும் ஒற்றுமையும், இன்பும் உதவியும் கொண்டு ஒழுகுகின்றனர். அதற்குக் காரணம் முறையே தாய்தந்தையர் தொடர்பு, குடும்பத் தொடர்பு, கல்லூரித் தொடர்பு, அலுவலகத் தொடர்பு, நாட்டுத் தொடர்பு என்பனவேயாம். இத் தொடர்பு நினையாவிட்டால் யாருக்கும் ஒற்றுமையும் நலமும் பெற்று வாழமுடியாது.

௫. வழிபடத் தக்கவர்கள் யாவர்?

தமையன் தமக்கை தந்தைதாய் ஆசான் தலைவன் ஆன்றோர் ஆண்டவன் என்னும் எண்பாலராவர்.

௬. வழிபாடு எவ்வாறு செய்யப்படல் வேண்டும்?

கட்புலனும் ஓர் உருவில்வைத்தே வழிபாடு செய்தல் வேண்டும்.

௭. அதற்கு ஏதேனும் தக்க காரணம் உண்டா?

நாம், உருவினைப் பற்றும் இயல்பு வாய்ந்த மனம், கண், காது முதலிய பொறிகளைக் கருவியாகப்பெற்று வாழ்கின்றோம். இக்கருவிகளும் உருவுடையனவே. உரு உருவினையே பற்றும். ஆதலால் கடவுளையும் ஓர் அடையாள உருவில் வைத்து வழிபடுவதே எளிமையும் முறைமையும் ஆகும்.

௮. இவ்வுண்மையை ஏதாவது ஓர் ஒப்பில் வைத்து விளக்கலாமா?

நாம், அறிவு விளங்கக் கற்கின்றோம். அக்கல்வி நம் உள்ளத்தில் பதிகின்றது. அப்பதிவு எக்காலத்தும் எல்லார்க்கும் பயன்பெறுவதற்கு வரிவடிவாகிய நூல்வேண்டும். அந்நூலே முக்காலத்தும் மூவிடத்தும் பயன்தரும். எடுத்துக்காட்டாகத் திருவள்ளுவநாயனார் அருளிய திருக்குறள் வரிவடிவாகிய நூல்வடிவி லிருப்பதாலே தான் நம்முன்னுள்ளார்க்கும் நமக்கும் நம்பின்னுள்ளார்க்கும் ஒத்த பயன் தருகின்றது. அந்நூல் ஒலிவடிவில் மட்டும் இருந்திருப்பின் காதுக்கு மட்டும் புலனாகும். கண்ணுக்குப் புலனாகாது. கண்ணுக்குப் புலனாகாவிட்டால் கேட்கும் ஒரு சிலர்க்கே பயனாகும். அவர்களுக்கும் மறதி ஏற்பட்டால் நினைவுகொள்வதற்குத் துணையாக

வேறு கருவி கிடையாது. ஆதலால் உருவினாலேயே திரு எய்தும் உண்மை புலனாகும்.

௯. கடவுளை எவ்வுருவில் வைத்து வழிபடலாம்?

கடவுளுக்கு இயற்கையில் உருவில்லை. ஆயினும், எங்கும் நிறைந்துள்ள அவரை எவ்வுருவில் வைத்து வழிபட்டாலும் அவர் ஏற்று நமக்கு அருள் செய்வர்.

௧0. கடவுளுக்குத் திருவுரு அமைந்ததிலும் ஏதேனும் பாதபாடு உண்டா?

கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்ற பான்மையை நினைவுறுத்த எழுவகையும், உயிர்க்குயிராக நின்று உதவி இன்பருளும் தன்மையை நினைவுறுத்த ஒருவகையும் ஆக எட்டுவகை அமைத்துள்ளனர். அவை முறையே நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் பூதம் ஐந்து, விளக்கமுள்ள திங்களும் ஞாயிறும் இரண்டு ஆகிய ஏழும், அறிவிக்க அறியும் அறிவுள்ள உயிர்வகை ஒன்று மாகும். இவை படிமுறையாக ஒன்றைவிட ஒன்று சிறந்து விளங்குவனவாம்.

௧௧. கடவுளை வழிபடுதற்குரிய காலங்கள் எவை?

ஒவ்வொருநாளும் காலை நண்பகல் மாலை இரவு என்னும் நான்கு பொழுதுகளும், உண்பதன் முன்னும் பின்னும், உழைப்பதன் முன்னும் பின்னும், உறங்கச் செல்லும்பொழுதும், உறங்கி விழிக்கும் பொழுதும் ஆகிய ஆறுபொழுதுகளுமாம்.

௧௨. எம்முறையில் வழிபடல்வேண்டும்?

கடவுள் நினைவுடன் விடியற்காலையில் எழுந்து காலைக் கடன் முடித்துக் குளிர்ந்த நீரில் முழுகித் தூய ஆடை உடுத்துக் கடவுள் நினைப்பிற்கு அடையாளமாகிய சமயக் குறி பூண்டு புறந்தூயராகவேண்டும். அன்பும் ஆண்டவன்

மந்திரமும் இடைவிடாது மனத்துக்கொண்டு அகந்தூய ராகவேண்டும். அன்பும் அதன் இயக்கமும் விளக்கும் அடையாளமாகிய பூவும் புனலும், ஆற்றலும் அதன் இயக்கமும் விளக்கும் மணப்புகையும் சுடரொளியும், இசைவும் அதன் இயக்கமும் விளக்கும் இயமும் முழக்கமும், அறிவும் அதன் இயக்கமும் விளக்கும் பண்ணமை நூலும் வாயாரப்பாடலும் ஆகிய செயல்களும் வேண்டும்.

கந. எவ்வெவ்விடங்களில் வழிபடல்வேண்டும்?

வீடு முதலிய இடங்களில் வழிபாட்டுக்கென அமைத்த தூய அறைகளிலும், திருக்கோவில்களிலும் வழிபடல் வேண்டும்.

கச. எவ்வகை வழிபாடு சிறந்தது?

குடும்பத்துடனும் தோழர்களுடனும் ஆன்ரோர்களுடனும் அன்பும் பணிவுமாய்ச் சேர்ந்து கூட்டுவழிபாடு செய்வதே சிறந்தது.

கரு. வழிபாட்டுக்குச் செல்லும்போது எப்படிச் செல்லுதல் வேண்டும்?

யாருடனும் வழிபாட்டுக்குரிய பேச்சல்லாமல் வேறு பேச்சு இன்றிக் கடவுள் நினைவுடன் செல்லல்வேண்டும்.

கசு. வழிபாட்டு முடிவில் வேண்டுகோள் எவ்வாறு இருக்க வேண்டும்?

ஆண்டவரே! நும் திருவருளால் நாடும் மொழியும் நன்னெறியும், அறமும் முறையும் ஓங்குக. குடும்பமும் சுற்றமும் தழைக்க; கல்வியும் உழைப்பும் ஒழுக்கமும் ஓங்குக. ஆண்மையும் ஆற்றலும் அரும்பேருதவியும் பெருகுக. பணிவும் இன்சொலும் பரவுக. ஒற்றுமையும் உறவும் உயர்க. மழையும் மாநிலவளனும் செழிக்க. செங்

கோலும் சேவகமும் சிறக்க. வாய்மையும் தூய்மையும் வளர்க. வழிபாடும் கோவிலும் வாழ்க. சிற்றுயிரும் செல்வமும் செழிக்க.

2. வேண்டுகோள்

க. துயிலெழுதல்

ஆண்டவன்பால் என்னென்ன வேண்டுதல் செய்ய வேண்டும்?

எல்லாச் செயற்கும் கடவுளின் திருவருள்துணை வேண்டும்; ஆதலால், செயல் தொடங்குங்கால் அடியில் வருமாறு தொழுது தொடங்குக.

எல்லாம்வல்ல ஆண்டவரே! உமக்குரிய மக்களும் அடிமைகளுமாகிய அடியேங்களை நனவிற் காத்தருளியது போல் கனவிலும் உறக்கத்திலும் காத்தருளிய பேரருளுக்கு மனமார வணக்கம் புரிகின்றோம். நச்சுயிர் நச்சுக்காற்று கொடுவிலங்கு கள்வர் பகைவர் முதலியவற்றால் எவ்வகை இடையூறுமின்றிக் காத்தருளிய நும்பேரருள் அளவிட்டுச் சொல்ல முடியாதது.

உ. நீர் மூழ்குதல்

ஆண்டவரே! நாங்கள் மூழ்கும் இக்குளிர்ந்த தண்ணீர் நும்திருவருளால் பொழியும் மழையினின்றும் உண்டாயது. நும்திருவருளை நினைவூட்டுவது. இத்தண்ணீர் குளிர்ந்திருப்பதுபோல் இதில் மூழ்கும் எங்களுடைய உள்ளமும் ஈவு இரக்கங்களால் குளிரும்படி அருள்புரிவீராக. இத்தண்ணீரால் உடலழுக்கு அகலுவது போன்று உம்முடைய திருவருள்நீரால் அறியாமை பொய் முதலிய உள்ளத்து அழுக்கும் அகல்வதாக. நீரிலும் நீங்கா இறைவனே போற்றி.

க. தொழுதல்

எவ்வகைக் கைம்மாறும் வேண்டாது உலகு உடல் உண்பொருள்களைப் படைத்து எங்களைக் காத்து வாழ் வித்தருளும் ஆண்டவரே! உம்முடைய திருவடியைப் போற்றுகின்றோம். உம்முடைய பெரும்புகழை எங்களு டைய சிறுநாவால் சிறுசொல்லால் சிறுபொழுதினுள் சொல்லி முற்றுறமுடியாது. சிறுபிள்ளைகளின் சிறுசொல் லைப் பெற்றோர்கள் கேட்டு மகிழுமாறுபோல, அடியேங் கள் சொல்லையுங் கேட்டு மகிழ்ந்தருள்வீராக. அடியேங் களை நல்லவழியில் நடத்தியருள்வீராக. அடியேங்களுக்கு வேண்டும் எல்லா நலங்களையும் அவ்வப்போது முட்டின் றித் தந்தருள்வீராக. உம் மக்களாகிய ஓரறிவுமுதல் ஆறறிவு ஈறாகச் சொல்லப்பட்ட எல்லாவுயிர்களுக்கும் செய்யும் உதவிகள் நும்திருவடித் தொண்டு என்னும் நல் நினைப்பைத் தந்தருள்வீராக. நாட்டுக்கும் மொழிக்கும் அரசுக்கும் வீட்டுக்கும் செய்யவேண்டிய கடமைகளை முழுவலிமையுடன் செய்யும் ஆண்மையைத் தந்தருள்வீ ராக. உண்மை அறிவு இன்ப உருவுடை ஒருவனைத் தோன்றும் முழுமுதலே போற்றி.

உ. கற்றல்

வாலறிவனுய்த் திகழும் ஆண்டவரே! எங்களுடைய மனத்தில் எழுந்தருளி எங்கள் பாடங்களை எங்களுக்கு விளக்கி அருள்வீராக. எங்கள் பாடங்களை நாங்கள் படிக்கும்பொழுது எங்கள் உள்ளம் வேறொன்றினும் செல்ல ஒட்டாது காத்தருள்வீராக. எங்கள் பாடம் நன் ருக மனத்தில் பதிந்து நினைவுக்கு எப்பொழுதும் வரு மாறு அருள்புரிவீராக. எங்களுக்கு அன்புடன் பாடங் கற்பிக்கும் ஆசிரியரைத் தம்மைப்போலவே கருதி வழி பட்டு உய்யுமாறு அருள்செய்வீராக. தானே விளங்கும் தனிஅறிவுத் தந்தையே போற்றி.

௫. உண்டல்

காற்றும் நீரும் நிலனும் வித்தும் கூடிவிளைவதால் உண்டாகும் நிலைத்திணைப் பொருள்களே (தாவர உணவே) துப்பாய உணவாகும். இவ்வுணவுகளை விளைப்பாரும் விற்பாரும் ஆக்குவாரும் அளிப்பாரும் தூயமனமும் அன்பு கலந்த மொழியும் இன்புகலந்த செயலுமாக உணவுதர அருள்செய்வீராக. இவ்வுணவு உம்முடைய திருவருளால் படைத்தருளிய உடலுக்கு உறுதிதந்து உயிர் நிலைத்திருக்கச் செய்கின்றது. ஆகவே, இதனை முதற்கண் உம்முடைய திருவடிக்கே அன்புடன் ஒப்புவிக்கவும், பின் உம்முடைய திருவருட் கொடையாகக் கொண்டு உண்டு நிறைவுறவும் அருள்புரிவீராக. பலருடன் கூடியுண்ணும் பண்பு நீங்காதமைய அருள்புரிவீராக. எங்களுக்கு வேண்டும் உணவுகளை என்றென்றுந் தந்தருள்வீராக. உணவுடன் கலந்து உயிர்க்கு உயிராம் ஒருவனே போற்றி.

௬. உழைத்தல்

ஆண்டவரே! எல்லாம் உம் உடைமை, எல்லாரும் உம் மக்கள், எவ்வுயிரும் நும் இருக்கை; இவ்வகை அற நினைவுடன் உழைக்க அருள்புரிவீராக. உழைப்பால் வரும் ஊதியம் நும் அருள் என்னும் உண்மை உணர அருள்புரிவீராக. உழைப்பின்கண், ஊதியம் கருதி உள்ளம் முறைகடந்து செல்லாதிருக்கும்படி காத்தருள்வீராக. பிறருடைமையும் என் உடைமைபோல் எண்ணி நடுவு நிலையுடன் உழைக்கும் உணர்வு அருள்வீராக. உழைப்பால் வரும் ஊதியமும் நும் அருளால் எல்லாருக்கும் உதவவே என்னும் நன்மனம் தந்தருள்வீராக. அவ்வுதவியும் நம் திருவடித்தொண்டே என்னும் உறுதியை மறவாதிருக்க அருள்புரிவீராக. உழைப்பை உவக்கும் ஒருவ போற்றி.

௭. உதவல்

அடியேங்கள் செய்யும் சிறு உதவியும், நும் திருவருளால் கிடைத்த நும் உடைமையை நும் மக்களுக்கே ஒப்புவித்துக் கடமையை நிறைவேற்றினேம் என்னும் உவகை உண்டாக வழியாகும்படி அருள்புரிவீராக. உதவும் காலத்து நும் திருவருள் நினைப்புடன் நும் திருப்பெயர் வாழ்த்தி உதவ அருள்புரிவீராக. உதவி பெற்றவர்களை நும் ஏவலரென உண்மையாகக் கருதி மகிழ அருள்புரிவீராக. உதவ உளம் அருள் உணர்வே போற்றி.

௮. உறங்கல்

ஆண்டவரே! உம்முடைய திருவருளால் இந்நாள் வைகறைமுதல் இதுகாறும் அடியேனைக்கொண்டு சிலபல நன்மைகள் செய்வித்தருளிய திருவடியைப் போற்றுகின்றேன். அறிந்தோ அறியாமலோ நேர்ந்துள்ள செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமையாகிய வழுவும், செய்யத் தகாதவற்றைச் செய்ய நினைத்ததாகிய இழுக்கும் பொறுத்தருள்வீராக. இனிமேல் அவ்வாறு நிகழாமல் காத்தருள்வீராக. உறங்கும் பொழுது நும் திருவடியே உன்னி உன்னி உறங்க அருள்புரிவீராக. உறக்கிலும் கைவிடா உண்மையே போற்றி.

மாணவர் ஒழுக்கம்

க. ஒழுக்கம் என்பது யாது?

உயிர்கள் இன்புற்று வாழ்வதற்கு நல்ல வழியில் இடைவிடாமல் நடப்பது.

உ. ஒழுக்கம் எத்தனை வகைப்படும்?

மூன்று வகைப்படும்.

௩. அவை யாவை ?

மனம், மொழி, மெய் என்னும் மூன்றுமாம்.

௪. அவற்றல் நிகழ்வன என்ன ?

மனத்தால் நல்ல நினைப்பும், மொழியால் நல்ல சொல்லும், மெய்யால் நல்ல செயலுமாம்.

௫. மாணவர் என்பார் யாவர் ?

கற்கும் பருவத்துள்ள ஆண்பாலார் பெண்பாலார் அனைவரும் மாணவரே. அவர்கள் வீட்டிலிருப்பினும் கல்லூரியிலிருப்பினும் மாணவரேயாவர். வீடும் அவர்களுக்குக் கல்லூரியே.

௬. மாணவர் முதன்முதல் பழகவேண்டிய நற்பழக்கம் யாவை?

வீட்டிலுள்ள எல்லாருடனும் அன்பாகவிருப்பது; இனிமையாகப் பேசுவது; பணிவுடன் நடப்பது; முதியோரைக் கண்டால் எழுந்து கைகூப்பி வணங்குவது; சிறுபொருள் பெற்ருலும் பொருள் ஈந்தார்க்கு உடன் நன்றி அறிவிப்பது முதலியன. இவைகள் முற்றும் கல்லூரியிலும் இவ்வாருகவே அமையவேண்டும்.

௭. மாணவர் கடவுள் நினைவைக் கைக்கோள்ளுவதெப்படி ?

வீட்டிலுள்ள தாய் தந்தையர் தமையன் தமக்கையர் முதலிய பெரியோர்களைத் தெய்வமாகக் கருதி வழிபடல் வேண்டும். எப்பொழுதும் கடவுள்நினைவுடனேயே இருக்கவேண்டும். கடவுள் அறியாமையாகிய இருளைப் போக்குகின்ருர்; அறிவாகிய ஒளியை விளக்குகின்ருர். ஆதலால், அவரை ஒளிவடிவில் வைத்து வழிபடுவதே மேலானது. அல்லது அவரவர் மனங்கொண்ட திருவுருவம் ஏதும் வைத்துக்கொள்ளலாம்.

அ. கடவுளைத் தொழும்பொழுது சிறப்பாகக் கருதவேண்டுவன யாவை ?

மறவாமல் கடவுளை எப்பொழுதும் நினைத்தல்வேண்டும். அப்படிப்பட்ட மனமே திருக்கோவில் ஆகும். கடவுள் நம்மை நல்வழியில் நடத்துகின்றார் என்னும் முறைமையை உறுதியாகக் கொள்ளல்வேண்டும். இது தான் திருக்கோவிலுக்கு வேண்டும் திருவிளக்கு. கடவுள் நினைப்பால் உண்டாகும் இன்பமே கடவுளுக்குச் செய்யும் சிறப்பாகும். அவரிடத்தும் அவரோடு தொடர்புடைய எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்தல் வேண்டும். இவ்வன்பே வழிபாடு ஆகும். மறவாதிருத்தல், கடவுளின் அருள்வழி நிற்றல், கடவுள் இன்பம், அன்பு இவற்றைக் கைக்கொள்ளுதலே கடவுள்வழிபாடாகும்.

௬. கடவுள்வழிபாட்டையும் வாழ்வையும் கேடுக்கும் பெருந் தீமைகள் எவை ?

பொய், கொலை, களவு, கள், காமம் என்ற ஐந்துமாகும்.

அ. பொய் என்பது நாம் சொல்லும் சொல்லால் பிறர்க்குத் துன்பம் வருவது. எல்லார்க்கும் இன்பம் உண்டாக்குஞ் சொல் மெய். ஒருவர்க்காவது துன்பம் உண்டாக்கும் சொல் பொய்.

ஆ. கொலை என்பது உயிரை உடம்பினின்று பிரிப்பது. உயிர்க்கு உடல் ஆண்டவனால் கொடுக்கப்படுவது. உயிர் உடலுள் வாழ்ந்து அறிவு நிரம்பி ஆண்டவனைச் சேரும். இது கப்பலில் இருந்து கரை சேருவதுபோலாம். கப்பலை நடுக்கடலில் உடைத்துவிட்டால் எவ்வளவு பாவமோ அவ்வளவு பாவம் உயிரை உடலினின்றும் பிரித்து விடுவது. கொலை எவ்வளவு பாவமோ அவ்வளவு

பார்வம் கொன்றதனால் வரும் ஊனைத் தின்பது. ஊன் தின்பதே கொலைக்குக் காரணம்.

௩. களவு என்பது பிறருடைய பணத்தையோ பண்டங்களையோ நாம் அடையவேண்டும் என்று ஆசைப்படுதல். அதனால் அவர்களை வஞ்சித்து அவைகளை யாரும் அறியாமல் எடுத்துக்கொள்ளுதல். சூதும் இக்களவுடன் ஒத்தது.

௪. கள் என்பது அறிவை மயக்கும் குடிவகைகளும், நினைப்பும், சொல்லும், காட்சியும் ஆகும். நல்லொழுக்கத்துக்குத் தடையான எல்லாம் கள்ளே.

௫. காமம் என்பது விருப்பம், ஆசை என்னும் பொருளுடையது. ஆசைப்படும் பொருள் பிறருடையதாக இருந்தால், அவ்வாசை கூடாது. தன்னுடையதாக இருந்தால் கொள்ளத்தக்கது. அதுவும் அறமுறைக்கும், ஒழுக்கத்துக்கும், உதவிக்கும் இடையூறு இல்லாமல் இருக்கவேண்டும். இவைகளுக்கு இடையூறு வருமானால் அவ்வாசை தள்ளத்தக்கதே.

௧0. குற்றத்தை ஒப்புக்கொள்வது குணமாகுமா ?

குற்றத்தை ஒப்புக்கொள்வது குணத்தினும் பல மடங்கு நல்லது. ஏனென்றால் மேலும் குற்றம் செய்யாமல் திருந்துவதற்கு அதுவே வழி.

௧௧. ஒருவருடன் ஒருவர் அன்புகொள்ளும் முறை எவ்வாறு ?

கல்லாச் சிறுவரும் விளையாட்டுப் பருவத்து ஒருவருடன் ஒருவர் அன்பு செய்கின்றனர். அவர்கள் அன்பு செய்வது ஏதும் எதிர்பார்த்தன்று. தூய உள்ளத்துடன் அன்பு ஒன்றுக்காகவே அன்பு செய்கின்றனர். ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாமலிருக்கவே விரும்புகின்றனர். ஒருவர் துன்பம் மற்றவர்க்கும் ஆகின்றது. இது

போலவேதான் இன்பமும். ஏதேனும் கொடுத்து உதவ வேண்டுமென்று எண்ணுகின்றனர். உதவுகின்றனர். இம்முறைமை பெரியவர்கள் ஆகுங்காலத்து மிகவிரிந்து ஒற்றுமையும் உறவும் ஊதியமும் பெருகிப் புகழுடன் வாழ்வதற்குத் துணைபுரியும்.

௧௨. எப்பொழுது படுக்கையைவிட்டு எழுதல் வேண்டும் ?

விடியுமுன் ஐந்து நாழிகைப் பொழுதிருக்க எழுந்திருத்தல் வேண்டும். அஃதாவது விடியற்காலம் நான்கு மணிக்கு.

௧௩. எழும்பொழுது எப்படி எழுதல்வேண்டும் ?

கடவுள்நினைவுடன் கைகூப்பிக் கொண்டு கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நோக்கி எழுதல்வேண்டும். "வாலறிவன் வாழ்க" என்று மென்மையும் இனிமையும் பொருந்த இசைத்துக்கொண்டே எழுதல்வேண்டும்.

௧௪. பின்பு செய்யவேண்டுவது யாது ?

குளிர்ந்த நீரால் வாய் கொப்புளித்தல்வேண்டும். முகம் கைகால் கழுவிக்கொள்ளல்வேண்டும். சமய அடையாளம் பூண்டுகொள்ளல்வேண்டும். ஒரு குவளை தூய தண்ணீர் பருகவேண்டும். பின் சிறிது உலாவல்வேண்டும். தொலைவிலேலோ, ஒதுக்கிடத்திலோ (கக்குசு) வாய் பேசாது மலசலம் கழித்தல்வேண்டும். கலத்தில் தண்ணீர் கொண்டு துப்புரவாய்க் கால்கழுவிக் கொள்ளல் வேண்டும்.

௧௫. எவ்வாறு பல் துலக்குதல் வேண்டும் ?

வேம்பு ஆல் வேல் கருவேல் முதலிய மரங்களின் குச்சுகளால் பல் துலக்குவதே நல்லது. பல்லுக்கு நலந் தரும் சில மருந்துப்பொருள்களால் செய்யப்பட்ட

மென்மையான தூள்களைக்கொண்டுந் துலக்கலாம். கரிசலாங்கண்ணி மாந்தளிர் முதலிய மெல்லிய இலைகளாலும் துலக்கலாம். மெல்லிய ஈர்க்கின் பிளவுகொண்டு நாக்கு வழிக்கவேண்டும்.

கசு. வேறு எவைகளால் துலக்குதல் கூடாது?

சாம்பல், செங்கல், மண், மணல், கரி முதலிய பொருள்களால் துலக்குதல் கூடாது. இவை பற்களைக் கெடுத்து விடும்.

கஎ. பின்பு செய்யவேண்டுவது யாது?

திறந்த வெளியில் ஒரு நாழிகை நேரத்துக்குக் குறையாமல் உடற்பயிற்சி செய்தல்வேண்டும். உடற்பயிற்சியுள் ஓட்டம் மிகச் சிறந்தது.

கஅ. எவ்வாறு முழுகுதல்வேண்டும்?

யாறு கால்வாய் முதலிய நீரோட்டங்களிலும், ஏரி குளம் முதலிய பெரிய நீர் நிலைகளிலும் மார்பளவு தண்ணீரில் நின்று தலைமுழுகுதல்வேண்டும். கிணறுகளிலும் தண்ணீர் இறைத்துத் தலைமுழுகுதல் செய்யலாம். முழுகுவதற்குமுன் ஆடை முதலியவற்றை நன்றாய்த் துவைத்துக்கொள்ளல்வேண்டும். அரை ஆடையுடனே முழுகுதல் வேண்டும்.

கக. முழுகும்பொழுது செய்யவேண்டுவன யாவை?

மனம் தீய நினைப்பு, கவலை, நடுக்கம், வெகுளி, படபடப்பு முதலிய குற்றங்கள் இல்லாமல் இருக்கவேண்டும். அதற்காகக் கடவுளை நினைத்துக்கொண்டே முழுகல் வேண்டும். அவரின் திருவருள் செயலை மெல்லென ஓதிக்கொண்டு முழுகுவதும் நல்லது.

உ௦. உடம்புக்குச் சவுக்காரம் தேய்த்து முழுகுவது நல்லதா ?

நல்லதன்று. பலர் நல்லதெனக் கூறிக்கொள்ளினும் இயற்கையோடு இயைந்தது அன்று. அதற்கு ஈடாகப் பச்சைப்பயற்று மாவைப் பயன்படுத்தலாம். சிகைக்காய்த் தூள் கையாளலாம். உடனுக்குடன் செய்யவேண்டு மாயினும் பச்சைப் பயறும் தேங்காயும் ஒன்றாக வைத்து அரைத்துத் தேய்த்து முழுகலாம். உடம்பழுக்கைக் கையால் அழுத்தித் தேய்த்துப் போக்கி முழுகுவது நல்லது. எண்ணெய்முழுக்கும் சனிக்கிழமைதோறும் செய்தல் வேண்டும்.

உக. முழுகியவுடன் செய்யவேண்டுவது யாது ?

கெட்டியான ஈரத் துண்டைக் கொண்டு நன்றாகத் துவட்டுதல் வேண்டும். தோய்த் துலர்ந்த இடுப்பாடை ஒன்று மேலாடை ஒன்று கட்டிக்கொள்ளல்வேண்டும். தெய்வ அடையாளங் கொள்ளுதல்வேண்டும். அரைநாழி கைக்குக் குறையாமல் கடவுளை அன்புடன் வழிபட்டு வாழ்த்துதல் வேண்டும்.

உஉ. பின் யாது செய்தல்வேண்டும் ?

பள்ளிப்பாடங்களை ஐந்து நாழிகை அளவுக்குக் குறை யாமல் தன் செவிக்குமட்டும் கேட்கும் முறையில் மெல் லெனப் படிக்கவேண்டும். படிக்குங் காலத்து மனம் படிப்பிலேயே அழுந்தியிருக்க வேண்டும். நிமிர்ந்து உட்கார்ந்திருத்தல் வேண்டும். காலாட்டுதலோ கை ஆட் டுதலோ கூடா. நடந்துகொண்டோ பேசிக்கொண்டோ படித்தலும் கூடாது. நகத்தைக் கடித்தல், எழுதுகோலைக் கடித்தல், தாளைக்கடித்தல் முதலியவை கூடா. வீண் சிரிப்பும் பயனில் பேச்சும் எப்பொழுதும் ஆகா. பராக் குப் பார்த்தலும் வேறொன்றிற்குக் காது கொடுத்தலும்

ஆகா. வீணாக எச்சில் உமிழ்தல் ஆகாது. உமிழநேரின் தலைகுனிந்து எச்சில் நிலத்தே படும்படி உமிழ்தல் வேண்டும்.

உ௩. பின் யாது செய்தல் வேண்டும்?

கற்றபின் கால்நாழிகை நேரம் அமைதியாக இருத்தல் வேண்டும். அமைதியாக இருக்கப் பழகுவதும் சிறந்த நற்பழக்கமேயாம். பதினைந்து நாழிகைக்குப் பேருணவு கொள்பவர்கள் குளிர்ந்த சிற்றுணவு ஏதுங்கொள்ளலாம். பெரும்பாலும் வெந்நீர்ப்பழையதும் இட்டலியுமே சாலச் சிறந்தது. காஃபிக்குடி அறவே கூடாது. தனிப்பாலும் மாலையிலும் இரவிலுமே கொள்ளுதல் நல்லது. காலையில் மோர் பருகுதலே நன்று.

பத்து நாழிகைக்குப் பேருணவு கொள்பவர்கள் கற்ற பின் சிறிதளவு மோர்மட்டும் பருகுதல் நன்று.

உணவின் வேண்டுகோள்: அன்புருவாம் ஆண்டவரே! அவ்வப்பொழுது எங்களுக்கு அருளும் இனிய தூய உணவின் பொருட்டு உம்மை வாழ்த்த அருள் புரிவீராக.

உ௪. பேருணவு எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?

பச்சரிசியினும் புழுங்கலரிசியே நல்லது. நெல்லைப் பதமுற வேகவைத்துப் புழுங்கலரிசி ஆக்குகின்றோம். அப்பொழுது அரிசியின் தவிட்டில் பெரும்பகுதி அரிசியின் உள்ளாகிவிடுகின்றது. சோறு வடிப்பது நல்லது. ஆனால் வடிகஞ்சியைப் பயன்படுத்தல்வேண்டும். இல்லாவிட்டால் வடியாமல் பொங்கி யுண்பதேமேல். உணவுடன் கீரை, கிழங்கு, வழுவழுவப்பான காய்கள், பருப்புவகைகள், கசப்புப் பொருள்கள், பழங்கள், நெய், மிளகு, சீரகம், உப்பு கட்டாயம் சேர்வது நன்று. புளியும்

எரிப்பும் குறைவாகவே சேர்த்தல் வேண்டும்; தயிர் மோர் ஊறுகாய் கட்டாயம் வேண்டும்.

உரு. எவ்வாறு உண்ணுதல் வேண்டும்?

உண்ணப்படும் பொருள் வன்மையாக இருப்பினும் மென்மையாக இருப்பினும் நன்ருக மென்று உண்ணல் வேண்டும். உண்ணுங்கால் உணவுப் பொருள் மாவாகி உமிழ்நீருடன் கலந்து கரையப் பெற்றுக் கூழாகி உட் செல்லுதல் வேண்டும். அவ்வுண வே குடலுக்கு மிகுந்த உழைப்பின்றிச் செரிக்க வாய்ப்பாகும். செரித்து உடலுடன் சேர்வதே உணவின் பயன். உண்ணும் பொழுது உணவைப் பொறுத்த பேச்சே பேசுதல் வேண்டும். உண்பதற்குமுன் சிறிதளவு குளிர்ந்த நீர் பருகுதல் வேண்டும். உண்ணும் பொழுது இடையிடையே நீர் பருகுதல் ஆகாது. உண்டபின் ஒருகுவளைநிறையக் குளிர்ந்த நீர் பருகுதல் வேண்டும். கூடுமானவரை உடன்பிறப்பும் சுற்றமும் விருந்தும் உடனிருந்து உண்ணும் வழக்கமே நல்லது. அதனையே கடப்பாடாகக் கைக்கொள்ளுதல் வேண்டும். உண்ணும்பொழுது மனம் அமைதியும் மகிழ்வுமாய் இருத்தல் வேண்டும். நல்ல நினைப்பும் நல்ல பேச்சும் பொருந்தியிருத்தல்வேண்டும்.

உசு. உண்டபின் யாது செய்தல் வேண்டும்?

கலத்தில் தண்ணீர்கொண்டு திறந்த வெளியில் நன்ருக வாய் கழுவிக் கொப்புளித்தல் வேண்டும். பலமுறை கொப்புளிப்பதே நல்லது. கையும் காலும் நன்ருகக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

உஎ. பின்யாது செய்தல் வேண்டும்?

கடவுளின் நினைவு கடவுளடையாளங்களுடன் பள்ளிக் கூடஞ் செல்லத் துவங்கவேண்டும். பள்ளிக்கூடத்தில்

அன்று நடக்கும் பாடப் புத்தகங்களும், குறிப்புச் சுவடிகளும், எழுதுகோல் முதலிய கருவிகளும் குறிக்கொண்டு நோக்கி எடுத்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். பெற்றோர்களிடமும் பெரியவர்களிடமும் விடை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். புறப்படும் பொழுது நன்ருகச் சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

உஅ. பள்ளிக்கூடத்துக்கு எவ்வாறு செல்லுதல் வேண்டும்?

பள்ளிமாணவர் அல்லது வகுப்பு மாணவருடன் சேர்ந்தே செல்லுதல் வேண்டும். தனித்துச் செல்லுவதினும் சேர்ந்து செல்வதே சிறப்பு; இதுவே, அன்பும் அறிவும் ஒற்றுமையும் பண்பும் வளர்வதற்கு வழியாகும்.

உகூ. தெருவில் போதும்பொழுது எப்படிப்போதல் வேண்டும்?

தெருவின் பெருவழியில் இடதுகைப் பக்கமாகப் போதல் வேண்டும். இடதுகைப் பக்கத்தும் தெருவின் ஓரமாகப் போதல் வேண்டும். பாடங்களை மனத்தில் நினைத்துக்கொண்டு போதல் வேண்டும். ஒருவர்பின் ஒருவராகப்போதல் வேண்டும். நேராகப் பார்த்து நிமிர்ந்து செல்லுதல் வேண்டும். கூடுமானவரை விரைந்து செல்லுதல் வேண்டும்.

௩0. தெருவில் எவ்வாறு செல்லுதல் ஆகாது?

மாணவர் பலர் கைகோத்துக்கொண்டு செல்லுதல் கூடாது; தெருநடுவே செல்லுதல் கூடாது. மக்கள் நெருக்கமாகப் போகும்போது அவர்களுக்கு முந்திவிட வேண்டுமென்று அவர்களிடையே போதலும் கூடாது. மாட்டுவண்டி பொறிவண்டி முதலியன வரும்போது குறுக்குமறுக்குமாகப் போதலும் ஓடுதலுங் கூடாது. ஓர் ஓரத்திலே விலகி நிற்றல்வேண்டும். ஒருவரோ

டொருவர் பேசிக்கொண்டு போதலும் கூடாது. பாடங் களைப் படித்துக்கொண்டு போதலும் கூடாது. எவ்வ கைக் காட்சியையும் பார்த்துக்கொண்டே நடத்தல் கூடாது. (பார்க்கவேண்டுமாயின் நின்றே பார்த்தல் வேண்டும்.) (வண்டிகள் செவ்வையாக நின்ற பின்னரே ஏறவோ இறங்கவோ செய்தல்வேண்டும்.) வண்டிகள் போய்க் கொண்டிருக்கும் பொழுது ஏறவும் இறங்கவும் கூடாது. வழியில் விளையாடுதல் கூடாது. சண்டை யிடுதல் கூடாது. வீணகக் காறி உமிழ்தலும் கூடாது. நகத்தைக் கடித்துக்கொண்டு நடத்தல் கூடாது.

கக. பள்ளிக்கூடம் சென்றதும் என்ன செய்யவேண்டும்?

அழைப்புமணி யோசையின் முன்பே பள்ளிக்கூடம் செல்லுதல் வேண்டும். அமைதியாக இருந்து பாடங் களை நினைவுகூரவேண்டும். நினைந்தவற்றை மாணவர் களுடன் ஒப்புவித்துச் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண் டும். மணி அடித்ததும் வகுப்பு அறைக்குள் அமைதி யாக ஒருவர்பின் ஒருவராக ஒழுங்காகச் செல்லுதல் வேண்டும்.

கஉ. வகுப்புக்குள் சென்றதும் யாது செய்தல்வேண்டும்?

ஒற்றுமையாக நின்று அன்பும் பணிவும் பொருந்தக் கடவுள் திருவுருவையும் ஆசானையும் நெஞ்சார நினைந்து வாயார வாழ்த்தித் தலையார வணங்கல்வேண்டும். ஆசான் கட்டளையிட்ட பின்னர் இடங்களில் அமர்தல்வேண்டும். இருக்கைகளில் நேரே நிமிர்ந்து இருத்தல்வேண்டும். காலாட்டுதல் கையாட்டுதல் சிரித்தல் முதலிய தீச்செயல் கள் கூடா. ஒருவரோடொருவர் முணுமுணுத்தல் வைதல் சாட்டிப்பேசுதல் சாடை காட்டுதல் முதலியவும் கூடா.

௩௩. பாடங்களை எவ்வாறு படித்தல் வேண்டும்?

ஆசிரியர் போதிக்கும் பாடங்களை உன்னிப்பாகக் கேட்டல் வேண்டும். தெளிவாகக் குறிப்பெடுத்தல் வேண்டும். ஆசிரியர் வினாக்களுக்குத் தக்கவாறு விடை சொல்லுதல் வேண்டும். வினாவைச் செவ்வையாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதன்பின்பே விடை சொல்லுதல் வேண்டும். ஒருவர் விடை சொல்லும்போது அவ்விடை சரியல்லவென்று தோன்றினாலும், அமைதியாக இருத்தல் வேண்டும். படபடத்தல் கூடாது. ஆசிரியர் வினவாதவரையில் விடைசொல்ல முந்துதல்கூடாது. நம்முடைய விடை சரியாக இருப்பினும், சரியான விடை சொல்லாத மாணாக்கர்களை இழிவாகக் கருதுதல் கூடாது.

௩௪. வகுப்பினுள் செய்யத் தகாதவை எவை?

இருக்கையிலும் எழுதுதற்குத் துணையாகிய சாய்வுப் பலகையிலும் கீறல் வடிவம் வரைதல் இழிசொல் எழுதுதல் நிறம் பூசுதல் அழுக்கடையச் செய்தல் முதலிய தீச் செயல்கள் ஆகா. புத்தகங்களைத் தொகுப்பாகக் குறித்த ஓரிடத்திலேயே வைத்து எடுத்தல்வேண்டும். கண்ட கண்ட இடங்களில் தனித்தனியே வைத்தல் கூடாது.

௩௫. பெரியவரைக் கண்டால் யாது செய்தல் வேண்டும்?

எல்லாரும் அமைதியாக எழுந்து கைகூப்பி வணங்க வேண்டும். அப்பெரியவர்கள் அமரும்படி சொன்னபின் இருக்கைகளில் அமர்தல் வேண்டும். அவர்கள் சொல்லும் நல்லுரைகளைக் கருத்தாகக் கேட்டு மனதில் பதிய வைக்கவேண்டும். குறிப்புச்சுவடியில் அவைகளைக் குறித்துக்கொள்ளுதல் வேண்டும். பின்பு அவற்றை விரித்து எழுதி ஆசிரியரிடம் காட்டித் திருத்தி வாங்கிக்கொள்ளல் வேண்டும். அதன்படி முயன்று நடக்கவேண்டும்.

கசு. கையெழுத்து எவ்வாறு இருத்தல் வேண்டும் ?

நாம் எப்பொழுதும் ஒன்றை என் எழுதுகின்றோம் என்று நன்றாகஆழ்ந்து எண்ணுதல்வேண்டும். நம்முடைய கருத்தைப் பிறர் எளிதாகப் புரிந்துகொள்ளவும், நமக்கு மறதி ஏற்பட்டால் நாம் நினைவுக்குக் கொண்டுவரத் தெரிந்துகொள்ளவும் எழுதுகின்றோம். அவ்வெழுத்துச் செவ்வையாக இருத்தல் வேண்டும். இளமாணவரும் தெளிவாகப் படிக்கக் கூடிய நிலைமையில் இடம்விட்டு வரி வரியாக இருத்தல்வேண்டும். அடித்தல் அழித்தல் திருத்தல் முதலியவை இருத்தல் கூடாது. ஐயத்துக்கு இடமின்றிப் புள்ளி, குறியீடு முதலியன அமைந்திருத்தல் வேண்டும்.

கஎ. பள்ளிக்கூடத்தில் எப்பொழுது விளையாடுதல்வேண்டும்?

விளையாட்டுக்கென வகுக்கப்பட்ட காலத்து விளையாடுதல்வேண்டும். அதுவும் வரையறுக்கப்பட்ட விளையாடுமிடத்தே விளையாடுதல் வேண்டும். பிறநேரங்களில் பிற இடங்களில் விளையாடுதல் கூடாது. ஓய்வு ஏற்படினும் பாடங்களை நினைத்துப் பார்ப்பதும் படிப்பதும் எழுதுவதுமாகவே இருத்தல் வேண்டும்.

கஅ. விளையாட்டு இன்றியமையாததா ?

விளையாட்டும் ஓர் உடற்பயிற்சியே. நீந்துதலும் இதனுள் அடங்கும். விளையாடுவதால் உடல் வலுவடையும். உள்ளம் தெளிவெய்தும். உரை விரைவும் இனிமையும் சுருக்கமும் பொருள் பெருக்கமும் செம்மையும் பெறும். உணர்வு விளக்கமுறும்.

கக. எவ்வளவு நேரம் விளையாடுதல் வேண்டும் ?

நன்றாக வியர்வை வந்து சிறிது களைப்பு அடையும் வரை விளையாடுதல் வேண்டும். பெருமூச்சுவாங்க விளையாடுதல் கூடாது.

௪0. விளையாட்டுத்தோழர்களுடன் எவ்வாறு பழகுதல் வேண்டும்?

இரண்டு பிரிவாகப் பிரிந்து எதிர் எதிர் நின்று பகைத் திறம்போன்று விளையாடினும் நடுவுநிலையும் அன்பும் அறமும் கைவிடுதல் கூடாது. வஞ்சனை ஏமாற்றம் பொய் முதலிய தீமைகள் மறந்தும் புகுந்துவிடல் ஆகாது. விளையாட்டுத்தானே என்று எண்ணாமல் இதுவே விரும்பும் வினைசெய்முறையும் என்று மனங்கொண்டு நடத்தல்வேண்டும். விளையாடும் எதிர்பக்கத்தார்க்கு உடம்பில் ஊறுண்டாகும்படி விளையாடுதல் கூடாது. வேண்டுமென்றே தள்ளல் அடித்தல் உதைத்தல் கடித்தல் கிள்ளல் மிதித்தல் இகழ்தல் உமிழ்தல் புத்தகம் முதலியவற்றை ஒளித்தல் முதலியவை செய்தல் கூடாது.

௪௧. விளையாட்டு முடிவில் என்ன கருதுதல் வேண்டும்?

விளையாட்டில் வெற்றிபெற்றவர்கள் பழம் எனவும், வெற்றி பெறாதவர்கள் அரும்பு போது மலர் பிஞ்சு காய் அருங்காய் எனவும் கொள்ளுதல் வேண்டும். இன்று வெற்றிபெறாதவர் நாளை வெற்றிபெறும் நிலையிலுள்ளார்கள் என்பதேபொருள். அதனால், உயர்வு தணிவு கருதுதல் கூடாது.

௪௨. அடுத்த மாணவர் புத்தக முதலியவற்றை எவ்வாறு பேணுதல் வேண்டும்?

நம்முடைய தம்பி தங்கை தமையன் தமக்கை முதலிய பிறப்பினர் (சகோதரர்) புத்தகங்கள் போன்று பேணுதல் வேண்டும். அவர்கள் மறந்துவைத்துவிட்டால் நாம் நினைந்து அவற்றை எடுத்துக்கொண்டுபோய் அவர்களிடம் சேர்ப்பித்தல் வேண்டும். இதுபோல் அவர்கள் நம்மிடம் சேர்ப்பித்தால் அவர்களுக்கு நாம் நன்றி கூறுதல்வேண்டும்.

௪௩. அப்புத்தகங்களை என்ன செய்தல் கூடாது?

அவைகளை ஒளித்துவைத்தல் கிழித்தல் கிறுக்கல் பாழாக்குதல் முதலிய தீமைகள் செய்தல் கூடாது.

௪௪. வேறு செய்யலாகாதவை யாவை?

வகுப்பு மாணவரையும் கல்லூரிமாணவர்களையும் இயற் பெயரும் சிறப்புப் பெயரும் அல்லாது இழிபெயர்கள் சொல்லி அழைத்தல் கூடாது. இனம் (சாதி) கொள்கை (சமயம்) செல்வம் வறுமை நிறம் வடிவு ஊண் உடை உரையாடல் முதலியவைபற்றி எவ்வகை வேறுபாடும் காட்டுதல் கூடாது. ஒருவரை ஒருவர் உடன்பிறப்பா கக் கருதுதல் வேண்டுமேயொழிய வேறாகக் கருதுதல் கூடாது.

௪டு. ஒருவரையொருவர் எவ்வாறு அழைத்தல் வேண்டும்?

முறைசொல்லி அன்புடன் அழைத்தல் வேண்டும். எல்லார்க்கும் அகவை (வயது) முறையில் அண்ணன் தம்பி அக்காள் தங்கையென முறை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். நாம் அழைக்கும் சொல் நம்முடைய பணி வைப் புலப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இம்முறை பிறர்க்கு வழிகாட்டியாகவும் இருத்தல் வேண்டும்.

௪சு. ஒருவரோடு ஒருவர் கொடுக்கல் வாங்கல் எவ்வாறு செய்தல் வேண்டும்?

அன்புடன் இருகையாலும் கொடுத்தல் வேண்டும். கொடுக்கும்பொழுது நன்றாக என்று சொல்லிக் கொடுத் தல் வேண்டும். வாங்கும்பொழுது இருகையாலும் வாங்கு தல் வேண்டும். வாங்கும்பொழுது நன்றி என மகிழ் வுடன் நவிலுதல் வேண்டும்.

சஎ. ஆசிரியர்களை எவ்வாறு நினைத்தல் வேண்டும்?

தந்தை தாயராய்த் தெய்வமாய்த் தலைவராய் நினைத்தல் வேண்டும். அவர்கள் மொழியை மந்திரமாக நினைத்தல் வேண்டும். அவர்கள் நடைமுறையை அரிய பெரிய ஒழுக்கமாகக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். அவர்கள் செய்நன்றியை என்றும் மறவாது நினைத்தல்வேண்டும். அவர்களைப்பற்றிப் பிறருடன் பேசும்போது நன்மதிப் புடன் பேசுதல் வேண்டும். அவர்களிடம் பேசும்போது எழுந்து அடக்கமுடன் நின்று பேசுதல்வேண்டும்.

சஅ. கல்வியின் சிறப்பு யாது?

கல்வி அழிவில்லாதது. பிறப்புத்தோறும் உயிருடன் தொடர்ந்து வருவது. விலங்கினும் மக்கள்பிறப்பு மேம் பாடு உடையதென்பதை விளக்குவது. கண்ணுக்குங் கருத் திக்கும் சிறப்புநிலை தருவது. கடவுள்நினைவை உண் டாக்குவது. நாடு மொழி நன்னெறி என்பவற்றின்கண் பற்றை உண்டாக்குவது. தற்பெருமையை அகற்று வது. வேற்றுமையை நீக்குவது. ஒற்றுமையை ஆக்குவது. தொலைவிலுள்ளார்க்கும் நம் கருத்தை அறிவிப்பது.

சகூ. கல்வி பெருதவதற்கு வேறும் வழிகள் உண்டா?

பள்ளிக்கூடங்களில் மாணவர்மன்றம் வைத்துக் கிழ மைக்கு ஒருமுறை அவைகூட்டிப் பல பொருள்கள் பற்றி விரிவுரை உரையாடல் நாடகம் கட்டுரை வழியாகத் தெளிவுபெறுதல். அவைத்தலைமை முதலிய உறுப்புக்க ளாக அமைந்து செயல் செய்வோர் உண்மைபாக வீட்டுக் கும் நாட்டுக்கும் தலைவர் முதலிய நிலையினராக வரும் தன்மையினராவர். ஆகவே, அவ்வச் செயல்களை நடுவு நிலைமையுடனும், ஆழ்ந்த கருத்துடனும், பெருநோக்குட னும், அன்புடனும், அறிவுடனும், ஒற்றுமையுடனும்,

தந்நலமின்மையுடனும், மதிப்புடனும், அமைதியுடனும், எண்ணிச் செம்மையுடன் செய்தல் வேண்டும். இவைகள் கல்வி பெருகுவதற்கு வழிகளாம்.

2. ஆள்வினையாளர் ஒழுக்கம்

க. ஆள்வினையாளர் என்பவர் யாவர்?

பள்ளிப்படிப்பும் கல்லூரிப்படிப்பும் கடவுள் அருளால் நிறைவு எய்தியபின் வாழ்க்கைத் துறைக்கு வழியாகிய வினைத்துறைக்கண் ஒழுகுபவர் ஆள்வினையாளர் ஆவர். வினைத்துறை - அலுவலகம். வினை, வேலை எனவும் சொல்லப்பெறும். வெல்லுதலையுடையது வேலையெனப் படும். எதை வெல்லுதல் எனின் தீமையை வெல்லுதல் என ஆகும். வேலை - பொழுது; பொழுதிறவாது செய்வது வேலை எனவுமாம்.

உ. எல்லாரும் வேலைசெய்யவேண்டுவது இன்றியமையாததா?

வேலைசெய்யவே ஆண்டவன் கைகால் முதலிய உறுப்புகளுடன் கூடிய உடம்பை படைத்துத் தந்தனன். வேலை செய்யாத உறுப்பு வாளா இருந்து பழுதுறும். ஒரு நேரங் காட்டுங்கருவி வேலைசெய்யாதிருப்பின் பழுதடையாதிருக்குமா? அம்மட்டுமா! அக்கருவியாலாகிய பயன் தான் யாது? ஆகவே இன்றியமையாது எல்லாரும் வேலைசெய்தல் வேண்டும்.

ங. உடம்பு பெற்ற பயன் உழைப்பது மட்டுந்தானா?

உழைத்து எல்லா உயிர்களுடனும் அன்பு செய்து அறமுறையால் வாழ்வது.

௪. அன்பு என்பது யாது?

அன்பு என்பது உயிரின் பண்பு. ஒருவருடன் ஒருவர் ஒற்றமையுற்று வாழ வழிசெய்யும் நெஞ்சுறைநேயம்; பிறர் துன்பம் துடைக்க வலிந்து முற்படும் பேராண்மை. இப்பேராண்மையால் ஊ ரா ண் மை உண்டாம். ஊராண்மை என்பது கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டு உதவி. உழைத்தே உதவவேண்டும். உழையா உதவி மழையிலாப் பயிர்போல் மாளும். சுருக்கச் சொல்லின் அன்பு என்பது உதவி என்றாகும்.

௫. உழைப்பின் நோக்கம் யாது?

எல்லாரும் இன்பமுடன் வாழ இயன்றமட்டும் இடைவிடாது பாடுபடுவது. அப்படி உழைக்குங்கால் ஊதியமாகப் பொருளும் புகழும் வரும். பொருளினும் புகழே சிறந்தது. புகழே உலகம் உள்ளமட்டும் நிலைத்து நிற்பது. உயிர்க்கு ஊதியமாவது.

௬. எப்படி உழைக்க வேண்டும்?

முழுமனதுடனும் முழுவிருப்பத்துடனும் உழைக்க வேண்டும். ஊதியத்தின் பெருக்க சுருக்கத்தை உழைக்கும்போது எண்ணுதல் கூடாது. உழைக்குந் துறையிலுள்ள மிக்கார் ஒத்தார் இளையார் என்னும் முத்திறத்தார் மாட்டும் ஒத்த அன்புடையராய் ஒழுகவேண்டும். இம்மூவரும் முகம் தோள் கால் என்னும் மூன்று உறுப்புப் போன்றவர் ஆவர். மிக்கார் மாட்டு அறிவுத் துறையிலும், ஒத்தார்மாட்டு ஆய்வுத்துறையிலும், இளையார் மாட்டு உழைப்புத் துறையிலும் உடன் ஒத்து ஒழுகுதல் வேண்டும். உழைப்பே உடலழகைத்தரும். உழைப்பே மன உறுதியைத் தரும். சொல் இனிமையைத் தரும்.

எ. நம்முடைய உழைப்பால் பிறர்க்கு என்னநேரிடல் வேண்டும்?

பிறர்க்கு நன்மையும் இன்பமும் நேரிடவேண்டும். அவர்களும் உழைக்கவேண்டு மென்னும் ஆர்வமும் ஊக்கமும் கொள்ளத் துணைசெய்யவேண்டும். நம்மிடம் எல்லார்க்கும் நீங்கா விருப்பம் உண்டாதல் வேண்டும். நன்மதிப்பு ஏற்படவேண்டும்.

அ. என்ன நேரிடுதல் கூடாது?

துன்பமும் வெறுப்பும் புன்மதிப்பும் பகைமையும் ஏற்படுதல் கூடாது.

கூ. அறத்தோடு பொருந்திய உழைப்பு யாது?

பிறர் உடைமையும் நம் உடைமைபோல் பாதுகாத்தல், களவுசெய்யா திருத்தல், பொய்கூறா திருத்தல், அளத்தல் நிறுத்தல் முதலியவற்றிற்குரிய கருவிகளைச் செம்மையாக வைத்திருத்தல், நடுவுநிலைமை குன்றாமல் அளந்து கொடுத்தல், அளந்துவாங்குதல் முதலியன.

க0. பொய் சொல்லுவதன் கேடு எவை?

பொய் சொல்பவனை ஒருவரும் நம்பார். அவன் கருதியபடி பொருளும் கைகூடாது. மதிப்பும் உண்டாகாது. உழைப்பும் கிட்டாது. உள்ளபொருளும் நீங்கும். இன்பத்துக்குக் காரணமாகிய நன்மை பொருந்தாது. துன்பத்துக்குக் காரணமாகிய தீமை பொருந்தும். நட்புத் தளரும். பகைவளரும். புகழ்வாராது. இகழ்வரும். மகிழ்ச்சி தோன்றாது. கவலைதோன்றும். நலம் நீங்கும். நோய் ஓங்கும்.

கக. களவு என்பது யாது?

பிறருடைய பொருள் மிகச் சிறிதாயிருப்பினும், அப்பொருளை அவர் அறியாமல் நாம் எடுத்துக்கொள்ள

நினைப்பது களவாகும். நினைப்பதே களவு என்ருல் செய்வது களவு என்பது சொல்லாமலே விளங்கும். நம்முடைய பொருளைப் பிறர் களவு செய்தார்களானுல் நாம் எவ்வளவு துன்பப்படுகின்ரேம் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும், நாம் பிறர் பொருளைக் களவு செய்ய நினைக்கும் பொழுது. களவுப் பொருளை நம்மிடமிருந்து உடையவர்கள் பறித்துக் கொண்டாலும் நமக்கு ஏற்பட்ட கள்வன் என்னும் தீப்பெயர் நீங்குவதில்லை. முறைமன்றத்தார் தண்டனையும் குறையாதுகிடைக்கும். என்னே களவின் கொடுமை! கடன் கொண்டவன் கடனைத் தீர்த்துவிட்டால் கடஞளி என்ற பெயர் நீங்கி விடும். களவுப் பொருளை அளவுக்கு மிஞ்சிக்கொடுத்து விட்டாலும் கள்வன் என்னும் பெயர் ஒருநாளும் நீங்காது.

கஉ. வஞ்சனை என்பது யாது?

பிறர்க்கு நம்பிக்கையை உண்டாக்கி அவர் சோர்வு பார்த்து அவர் பொருளை எடுத்துக்கொள்வது. உள்ளதை இல்லதென்றும், இல்லதை உள்ளதென்றும் நம்பச் செய்வது, நல்லதை அல்லதென்றும் அல்லதை நல்லதென்றும் கொள்ளச் செய்வது முதலியன வஞ்சனையாம்.

கந. சூது என்பது யாது?

நல்ல முறையாகப் பாடுபட்டுப் பொருள் தேடல்வேண்டும். அவ்வாறு செய்யாது, சிறு பொருளைப் பணையமாக வைத்துப் பெரும்பொருள் கவர நினைப்பது சூது.

கச. சூதாடுவோர் நிலை யாது?

சூதாடுவோர் எவ்வகை நன்மையும் எய்தார். சிறு பொருள் பெற்றுப் பேராசையால் முழுவதும் இழப்பர். முயன்று பொருள்தேடத் துணியார். இரந்துண்பதை

இழிவு எனவுங்கருதார். களவு செய்தேனும் சூதாடக் கருதுவர். கொலைக்கும் அஞ்சார். குடும்பத்தை எண்ணார். பெரியோரை மதியார். கடவுளை நினையார். அறத்தை வாயினாலும் சொல்லார்.

கரு. கள் என்பது யாது?

அறிவை மயக்கும் காட்சி கருத்து கேள்வி குடிவகை முதலியன கள் எனப்படும். வெளிப்படையாகத் தீங்கு தரும் கள் நம் உரிமை ஆட்சியில் ஒருவாறு நீங்கினாலும், மறைமுகமாக அறிவை மயக்கி நலத்தைக் கெடுக்கும் பொல்லாப் படக்காட்சியும், புகைக்குடியும், போலி நடையும், புரவி ஓட்டமும் (குதிரைரேசு) நீங்கவில்லை. இவையும் நீங்கவேண்டும். இவற்றையும் கள் எனவே கொண்டு கடிதல்வேண்டும்.

கசு. காமம் என்பது யாது?

காமம் என்பது ஆசை, விருப்பம், விழைவு, அன்பு, பற்று எனப் பொருள்படும். கொள்ளத்தகுந்ததில் ஏற்படும் காமம் நன்மைதரும். தள்ளத்தகுந்ததில் ஏற்படும் காமம் தீமைதரும். உரிமையுடைய பொருள்களில் வைக்கும் காமம் தவறாகாது. பிறர்க்கு உரிமையாகிய பொருள்களில் வைக்கும் காமமே தவறாகும். இக்காலத்துப் பெரும்பாலும் பெண்ணும் ஆணும் ஒருவரோடொருவர் நெறிமுறை தவறிப் பற்றுக் கொள்ளும் விருப்பத்தையே உலகவழக்கில் காமம் எனக் கொள்கின்றனர்.

கஎ. தவறான காமத்தில் நேரிடுவன யாவை?

பெண் கற்புடனும் ஆண் நிறையுடனும் ஒத்த காதல் ஒழுக்கத்தால் குடும்ப வாழ்க்கை நடத்தல்வேண்டும். இவ்வொழுக்கம் தவறி வேறொருவருடன் காதல் கொள்வார்களாயின் அஃது உலகோராலும், ஆட்சியினராலும்,

ஆண்டவனாலும் மன்னிக்க முடியாத பெருங்குற்றமாகும். பகை பழி பாவம் களவு கொலை அச்சம் முதலியன பெருகும். ஒரு குடும்பத்தைக் குலைக்கும் கொடுமையால் குலைத்தவன் குடும்பமும் குலைவுறும்.

கஅ. திருமணத்தின் தன்மை யாது?

திருமணம் பொருள் கொடுத்துப் பெறுவதன்று. அருளால், அன்பால், பழம் பிறப்பின் தொடர்பால் கிழமையாகப் பெறுவது. ஆண்டவனால் உயிர்க்கு உடல் அமைந்திருக்கின்றது. அதுபோலவே அவனருளாலே திருமணமும் அமைகின்றது. உயிர் நினைத்தவாறு உடம்பை நீக்கமுடியாது. நீக்க முற்படுவதும் குற்றம். அது போலவே திருமணமுடிந்தபின் ஒருவரை ஒருவர் நீக்க முற்படுவதும் குற்றம். கப்பலில் செல்வோன் கரை சேர்வதன்முன் அக்கப்பலை நீக்கமுடியுமா? கப்பலில் பழுது ஏற்பட்டால் பழுது நீக்கிச் செம்மை செய்வதே தக்கது.

கக. குடும்ப வாழ்க்கை குறிப்பது யாது?

வீட்டு வாழ்க்கை நாட்டு வாழ்க்கையின் அடிப்படை. குடும்பமாகிய ஆட்சியில் தலைவன் தலைவி துணைவர் உடன்பிறந்தார் மக்கள் மூத்தோர் என அறுவர் காணப்படுவர். இவ்வறுவரும் முறையே வேந்து, அமைச்சு, குடிகள், படைகள், காவலர் முறைநிறுத்துவார் ஆவர். ஒவ்வொரு குடும்ப ஆட்சியும் செம்மையாக அமைய வேண்டும். அப்படியானால்தான் நாட்டின் அரசாட்சியும் செம்மையாகும்.

உ0. நடுவுநிலைமை என்பது யாது?

அவரவர்க்குரியதை அவரவர்க்கே ஆக்குதலும், கடமையை வழுவாமல் செய்தலும் நடுவுநிலைமை யாகும்.

நினைப்பும் சொல்லும் செயலும் ஒன்றுபோல் அமைவதே நடுவுநிலைமையாம். பிறர், பருவம் அறியாது பொருள்களின் விலையை மலிவாகக் கூறினும் உண்மையை உள்ளவாறு அறிவித்துத் தொழில் செய்வதே நடுவுநிலைமையாகும். அவர் விலையைக் கூடுதலாக் கூறின் உண்மையை அறிவித்து உலகம் வழக்கிடுவதைக் காண்கின்றோமன்றோ? அவர்பொருளையும் நம்முடைய பொருள்போல் கருதுவதே நடுவுநிலைமையாம். அவரையும் தம்மவராகக் கருதுவதே நடுவுநிலைமையாம்.

௨௧. நடுவுநிலைமையை எப்படிக் கையாள வேண்டும்?

குடும்பத்திலும் பள்ளியிலும் தொழில்துறையிலும் ஆட்சி முறையிலும் நடுவுநிலைமையைக் கையாண்டு வருதல் வேண்டும். நடுவுநிலைமை ஒன்றே ஒற்றுமையைப் பெருக்கும் வழி. சிறுபருவம் முதலே பொருள்களை ஒற்றுமையுடன் கூட்டாக வாங்கி நடுவுநிலைமையுடன் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். இப் பழக்கமே நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மைதரும் நற்பழக்கமாகும்.

௨௨. சொல்வன்மை என்பது யாது?

கருதிய பொருளை விளக்குவதற்கு வேண்டிய அளவு சொற் சுருக்கமும் தெளிவும் அமைந்திருக்கவேண்டும். எந்தச் சொல்லும் சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும் பிறர்க்கும் எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் நன்மை தருவதாக இருத்தல் வேண்டும். பயனில்லாத சொல்லை ஒரு பொழுதும் சொல்லுதல் கூடாது. சொல்லிய சொல்லை நிறைவேற்றி வைப்பதே சொல்வன்மையாகும். சொற்களை முறைப்படுத்தி ஒருகோவையாகச் சொல்லுதல்வேண்டும். சொல்லும் பொருளும் தெளிவாக விளங்க வேண்டும். எந்தச்சொல்லும் யாரையும் மயங்கவைத்தல்

கூடாது. சொற்களை வலியுறுத்த இடையிடையே திருவள்ளுவர் போன்ற சான்றோர் அறவுரை கலந்திருப்பது நல்லது.

உக. கொலை என்பது யாது?

ஓர் உயிரை அது வாழும் உடம்பினின்று பிரித்துவிடுவது கொலையாகும். கொலைத் துன்பம் எல்லாத் துன்பத்தினும் மிக்கது. கொலைப்பாவம் எல்லாப் பாவத்தினும் கூடியது. நூறுவகைப் பாவம் உண்டானால் கொலை ஒன்று செய்கின்றவன் அந்நூறு பாவமும் செய்து அதற்குமேல் கொலைப்பாவம் ஒன்றும் கூடி நூற்றொரு பாவம் செய்கின்றவனாகின்றான். உயிர் உடம்பினின்று நீங்காமல் உடலுடனிருந்தும் உயிர் நீக்கினாலும் குற்றமில்லையென்று எண்ணும்படியாக அவ்வுயிர்க்குப் பெருந்தீங்கு செய்து துன்பிழைத்தலும் கொலையேயாம். இது, அலை எனப்படும். அலை - சித்திரவதை.

உஉ. கொலையை ஒத்த பெருந்தீங்குகள் யாவை?

நம்பிக்கைக் கேடு, உட்பகை, இரண்டகம், நேரே புகழ்ந்து புறத்தே பழித்தல், கற்பழித்தல், பொய்ச்சான்று சொல்லுதல், உறுதிமொழிந்து மாறுதல் முதலியன கொலையை ஒத்த பெருந்தீங்குகளாம்.

உங. வெகுளி என்பது யாது?

பிறருடன் கூடிவாழும் ஒற்றுமையைக்கெடுத்து வேற்றுமையை வளர்க்கும் வித்து வெகுளியாம். இவ்வித்து மனத்தே தோன்றும்பொழுது வெகுளி எனப்பெயர் பெறும். அது முகத்தில் தோன்றும்பொழுது சினம் என்ப. கடுஞ்சொல்லால் வெளிப்படும் பொழுது சீற்றம் என்ப. செயலால் துன்புறுத்தும்பொழுது செற்றம் என்ப. நீராப்பகையாக நிற்கும்பொழுது வன்மம் என்ப.

இவைமுறையே ஒரு புடையொப்பாக வித்து முளை கிளை கனி காழ்(விதை) எனக் கூறலாம்.

உசு. வெகுளியால் வருங்கேடு யாவை?

வெகுளி தீயை ஒத்தது. பிறர் துன்புறவேண்டுமென்று தீயை ஒருவன் தன் கையால் அள்ளி எறிகின்றான். அதனால் பிறன் சூடுகொண்டு துன்புறுகின்றான். அள்ளி எறிந்தவன் கையும் சூடுகொண்டு துன்புறும். வெகுளியுள்ளவனை அணுக யாரும் விரும்பார். வெகுளியுள்ளவன் உடல் எப்பொழுதும் கதகதப்பாகவே இருக்கும். இதனாலேயே வெகுளிக்குக் கதம் எனவும் மற்றொரு பெயர் உண்டு. அதனால், அவன் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய முகத்து நகையும் அகத்து உவகையும் அகலும். அகலவே, அவனது வாழ்க்கையாகிய உடல்நலம் உயிர்நலம் இரண்டும் செம்மையுறா.

உஎ. கடுஞ்சொல் என்பது யாது?

ஒருவன் சொல்லும் சொல் பிறன்செவியில் படும் பொழுது அவனுக்கும், கேட்டுக்கொண்டிருக்கும் மற்றவர்களுக்கும் துன்பம் தருவது கடுஞ்சொல். கடுஞ்சொல் உறவைக்கெடுக்கும். பகையை உண்டாக்கும். கடுஞ்சொல் சொல்பவனை எல்லாரும் வெறுப்பர். கடுஞ்சொல் உயிரைக்கொல்லும் நஞ்சுக்காயை ஒக்கும். கடுஞ்சொல்லால் கருதிய காரியம் கைகூடாது. கடுஞ்சொல் நடுக்கத்தை உண்டாக்கும். பிறர் சொல்லும் கடுஞ்சொல் நமக்கு வெறுப்பைத் தருவதை நாம் அறிகின்றோமன்றோ? கடுஞ்சொல் சிற்றுயிர்களையும் அஞ்சச் செய்யும். கடுஞ்சொல் ஓசையை மிகுத்து மூச்சுப்போக்கைக் கூடுதலாக்கும். அதனால், கடுஞ்சொல் பேசுவோர் வாழ்நாளும் குன்றும். கடுஞ்சொல் வெயிலையும் வெந்நீரையும் ஒக்கும்.

உஅ. இன்சொல் என்பது யாது?

சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும் முகமலர்ச்சியையும் அகக்குளிர்ச்சியையும் உண்டாக்குவது இன்சொல். எல்லா உயிர்களிடத்தும் அன்பு மாறாது பேசுவது இன் சொல். நல்ல மனதுடன் வஞ்சனை முதலிய இல்லாமல் பேசுவது இன்சொல். அறமுறையும் கடவுள்நினைவும் முன்னும் பின்னும் பொருந்தச் சொல்லுவது இன்சொல். இன்சொல்லால் கருதிய கருமம் எளிதாகக் கைகூடும். பகையும் உறவாகும். பலரும் நண்பராவர். எல்லாரும் விரும்புவர். இன்சொல் அன்பை வளர்க்கும். இன் சொல் நீங்கா நல்நிழலை ஒக்கும். இன்சொல் குளிர்ந்த புனலை யொக்கும்.

உக. ஈகை என்பது யாது?

இன்சொல்லுடன் பிறர்க்கு வேண்டப்படுவதொன்றைக் குறிப்பறிந்து மனமகிழ்ந்து கொடுத்தல். ஊண் கொடுத்தல், உடை கொடுத்தல், பொருள் கொடுத்தல், மருந்து கொடுத்தல், இருக்க இடம் கொடுத்தல், உணர்வு கொடுத்தல், உழைக்க வழிகாட்டல் முதலியவையும் ஈகையே. ஈதலின் பயன் புகழும் புண்ணியமும் ஆம். ஈதலின் சிறப்பு ஏற்றவர் நல்வாழ்வு எய்திப் பிறர்க்கு ஈயும் நிலையினராய் உயர்தல். எதுபோலென்றால், கற்பித்தலின் சிறப்புக் கற்றார் புலமை நிரம்பிக் கற்பார்க்குக் கற்பிக்க வல்ல புலவராதல் போன்று.

௩௦. முயற்சி என்பது யாது?

மனமும் மொழியும் மெய்யும் இடைவிடாது நல்லனவற்றில் முயலுதல். நல்ல நினைப்பும் நல்ல பேச்சும் நல்ல செயலும் செய்துகொண்டே இருத்தல். முயற்சியுடையவர் நன்மை புடையவராவர். நல்லவரையே நேசிப்பர்.

தீமைசெய்ய இடமும் பொழுதும் அவர்களுக்கு வாய்க்கா. பிறரையும் தம்மைப்போல் கருதுவர். இரப்பதற்கு மனம் ஒவ்வார். இயலாமையால் இரப்பார்க்குக் கரவாது ஈவர். கூடுமானவரை பிறர்க்கு உதவுவர். தம்மைச் சார்ந்தாரும் முயலுவதற்கு எடுத்துக்காட்டும் வழிகாட்டியும் ஆவர். நோயில்லா வாழ்க்கை வாழ்வர். மனமகிழ்ச்சியோடு இருப்பர். வீணான மனக்கவலை கொள்ளார். உள்ளமும் உடலும் உரம்பெற்று உயர்வர்.

௩௧. முயற்சிக்கு இடையூறவன யாவை?

சுறுசுறுப்பின்மை, மறதி, சோம்பல், உறங்கவேண்டாத காலத்து உறங்குதல், தீயாரோடு நேசித்தல், அடுத்தடுத்து உண்ண அவாக்கொள்ளுதல், பேராசை முதலிய பலவும் முயற்சிக்கு இடையூறுவன. இவற்றில் ஒன்றுக்கு இடங்கொடுப்பவனும் தன் அழிவுக்கே இடங்கொடுப்பவன் ஆகின்றான். இப்படிப்பட்டவனால் நாடும் வீடும் நலமுறா.

௩௨. கையூட்டு என்பது யாது?

தீய வழியில் பொருள் மிகுதியாகத் தேடவேண்டும் என்று ஆசைப்படுகின்றவன் அதற்குத் தடையாக இருப்பவர்களுக்குச் சிறு பொருளை மறைவாகக் கொடுப்பது கையூட்டாகும்; கையூட்டுக் கொடுக்கின்றவன் தான் கெடுவது மட்டும் அல்லாமல் தன்னைத் திருத்தக்கூடிய நல்லவர்களையும் கெடுத்துவிடுகின்றான். இதனால் நல்லவர்கள் வாழ்க்கையும் கெடுகின்றது. உலக வாழ்க்கையும் கெடுகின்றது. முடிவில் கையூட்டுக் கொடுத்தவன் உலகத்தையே கெடுத்த ஒரு பெரும்பாவி யாகின்றான்.

௩௩. வெஃகுதல் என்பது யாது?

பிறருடைமையைத் தப்புவழியில் தனதாக்கிக்கொள்ளக் கருதுதல் வெஃகுதல் ஆகும். பிறன் பொருளை வெஃகு

கின்றவன் தன் பொருளை இழந்து துன்புறுவன். வெஃகுதலால் களவு பொய் வஞ்சனை கொலை முதலிய தீமையெல்லாம் பெருகும்.

3. குடும்பத்தார் ஒழுக்கம்

க. குடும்பம் என்பது யாது?

நாட்டின் உறுப்பாய் நலமுற வாழும் வீடு குடும்பம் எனப்படும். குடும்பத்தின் பெரும்பகுதியினர் கணவன் மனைவியர் இவர்களின் உடன் பிறந்தார், பிள்ளைகள், தாய் தந்தையர், விருந்தினர், சுற்றத்தார், வேலையாள் முதலியோராவர்.

உ. வீடு எப்படி இருத்தல் வேண்டும்?

முன்னும் பின்னும் இடப்பரப்பு மிகுதியாய் நடுவில் வீடு அமைந்திருத்தல் வேண்டும். அவ்வீடு காற்றும் வெளிச்சமும் ஏராளமாக உட்புகும்படி நாற்புறமும் பெரு வாயில்களும் பலகணிகளும் பல அமைந்திருத்தல்வேண் டும். வீட்டினுள் நடுவே திறந்த வெளிபொருந்திய முற் றமும் வேண்டும். கொல்லை கொல்லையில் கிணறுசூழத், தெங்கு மா பலா வாழை கமுகு நெல்லி எலுமிச்சை மாதுளை கருவேப்பிலை முருங்கை முதலிய மரவகைகளும், கீரை காய்கறி முதலிய பயிர்வகைகளும் எப்பொழுதும் பயன்தந்துகொண் டிருத்தல் வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே முழுக்குப்புரை வேண்டும். தனித்தனியாக ஒதுங்கு மிடமும் (கக்குசு) வேண்டும். மாட் டுத்தொழு ஒன்றும் விளையாட்டிடமும் வேண்டும்.

முற்றத்தில் வேம்பு பூவரசு கிச்சிலி நாரத்தை வாழை முதலிய மரவகைகளும், முந்திரி பசளை முதலிய கொடி வகைகளும், மல்லிகை முல்லை முதலிய பூஞ் செடிவகை

களும் வளர்த்தல்வேண்டும். இவற்றையடுத்துப் புலவரும் விருந்தினரும் பிறரும் தங்க வாய்ப்பான பெருங்கூடம் ஒன்றும் அமைந்திருத்தல் வேண்டும்.

௩. புழங்தும் பண்டங்கள் எவ்வாறு இருத்தல் வேணடும்?

இருக்கை படுக்கை முதலியவற்றிற்கு வேண்டும் பொருள்கள் பலவும் மரத்தாலமைந்து தூயவாயிருத்தல் வேண்டும். சமைக்குங் கலங்கள் மண்ணாலமைந்தவையே மிகவும் சிறந்தது. கல்சட்டிகளும், வெண்கலமும் செம்பும் பித்தளையும் ஆகிய பொருள்களால் அமைந்த கலங்களும் ஏற்ற பெற்றி பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஈயக்கலங்களும் மரக்கலங்களும் வெள்ளிக்கலங்களும் தகுதிக்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். அஃகலங்களைக் கழுவித் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். ஒழுங்காக அடுக்கிவைத்திருத்தல் வேண்டும். எப்பொழுதும் ஒருமுறையாக வைத்திருக்கல் வேண்டும் எடுத்த பொருள்களை மீட்டும் அந்த இடத்திலேயே வைத்தல் வேண்டும். அப்படிக்கன்றி வெவ்வேறு இடங்களில் வைத்தால் குழப்பமாய் வேண்டும்போது விரைவாகவும் எளிதாகவும் எடுக்க முடியாமல் இன்னல் ஏற்படும். அம் மட்டுமன்றிக் குறித்தநேரத்து எடுக்க முடியாமல் போனாலும் போகும்.

௪. இல்வாழ்க்கையின் இன்றியமையாச் சிறந்த பண்புகள் யாவை?

அன்பு அறம் உழைப்பு தன்னலமின்மை கடன்படாமை சிக்கனம் வைப்பு விருந்தோம்பல் ஈகை இன்சொல் இகழாமை ஒற்றுமை ஒழுக்கம் முதலியன இல்வாழ்க்கையின் சிறந்த பண்புகளாம்.

௫. அன்பு என்பது யாது?

கணவனும் மனைவியும் ஒத்த கருத்தினராய் உடலிரண்டிற்கும் உயிர் ஒன்ருய் வாழும் வாழ்க்கைநேயம் அன்பு. அவ் அன்பு மக்கட்பேறு காரணமாக விரிவு எய்தும், அவ் விரிவு உறவும் பழக்கமும் உள்ள எல்லாரிடத்தும் செல்லும். அக்காலத்து அஃது ஆர்வம் எனப் பெயர்பெறும். பழக்கமில்லாத புதியரிடத்துச் செல்லும் அன்பும் ஆர்வமேயாம். ஒத்த உணர்ச்சியுடையார் மாட்டுச் செல்லும் அன்பே நண்பெனப்படும். ஒவ்வொருவரும் நண்பரின் நற்றுணைகொண்டுதான் செம்மையாக வாழ முடியும். உடம்பினைத் தாங்கும் என்புபோன்று உயிரினைத் தாங்குவது அன்பு.

௬. அறம் என்பது யாது?

நிலைத்த இன்பத்துக்கு இடையூருக இருக்கும் எதையும் அறுப்பது அறமாகும். இடையூருக இருப்பன தீமையும் பிறப்பும் ஆகும். தீமையை நன்மை செய்வதால் அறுத்தல் வேண்டும். பிறப்பினை ஆண்டவன் அருளாலும் அறிவு விளக்கத்தாலும் அறுத்தல் வேண்டும். இவற்றின் பொருட்டு நீத்தார் அருளிய அறநூன்முறையாகத் 'தீதொரீஇ' நன்மை கடைப்பிடித்து ஒழுகும் ஒழுக்கம் அறமாகும்.

௭. உழைப்பென்பது யாது?

குடும்பப் பொறை முழுவதும் தம்மையே சார்ந்ததென்று நல்ல நோக்கத்துடன் ஒல்லும் வகை இடைவிடாது பாடுபடுவது உழைப்பாகும். உழைப்பின் பயனை எல்லாரும் உண்டு இன்புற வலிய உதவுதல் வேண்டும். அவர்களின் இன்ப நிலையினைக்கண்டு இன்புற்று மகிழ்வதே தமக்குப் பயன்எனக் கருதுதல் வேண்டும். உழைக்கும்

பொழுது வெயில் மழை பனி பசி முதலியவற்றால் உடலுக்கு வரும் துன்பினை இன்பமாகக் கருதுதல்வேண்டும். அங்ஙனம் கருதுபவரே உழைப்பினை முட்டில்லாமல் வெற்றிபெற முடிப்பர். அவர்களே நாடும் மொழியும் நன்னெறியும் செழித்தோங்கி நலமுறப் பாடுபடுபவர்களாவர். அவர்களே நாட்டின் நல்லுறுப்பினராவர்.

அ. தன்னலமின்மை என்பது யாது?

பொருள்கள் எல்லாம் ஆண்டவனுக்குரியன. அவன் படைத்தருளியவை. அதனால் அவை அவனுக்கே உடைமையாம். உயிர்களெல்லாம் அவன் மக்களாகும். இவ்வுண்மை உணர்ந்தவர் அவனுக்கு அடித்தொண்டு புரியும் அடியராவர். பெற்றவர்கள் பிள்ளைகள் நலமே தம்நலமாகக் கருதுவர். அதுபோல் உழைப்பவன் உயிர்களின் நலமே தன் நலம் எனக்கருதி உயிர்களுக்கு வேண்டுவன உதவி வாழ்தல் வேண்டும். இவ்வாழ்வே தன்னலமின்மையாகும்.

க. கடன்படாமை என்பது என்ன ?

உழைப்பின் ஒருசிறு பகுதியை வைப்பாக மீத்து வைத்து வாழ்வதே வாழ்க்கை. அவ்வாறு வாழ்ந்துவந்தால் கடன்படவேண்டியது நேராது. ஒருவனுக்கு நேருங் கவலைகளுள் தீரமுடியாததும் அளவிறந்ததுமான கவலை கடன்படுவதே. கவலையே நோய்க்கெல்லாம் தாயாகும். கவலையின்மையே நலத்துக்கெல்லாம் அடிப்படை. வீண் பெருமையை விரும்பிச் செலவு செய்வதே கடன்படுவதற்குக் காரணமாகும். இன்றியமையாத ஊண் உடைகளுக்காக உண்மை உழைப்பாளிக்கு ஒருகாலமும் கடன்பட நேராது. உள்ளதுகொண்டு நல்லது நடத்தி வாழ்வதே கடன்படாமையாகும்.

௯௦. சிக்கனம் என்பது யாது ?

வருவாய்க்குத் தகுந்தபடி வாழ்க்கையைச் செட்டாகவும் செம்மையாகவும் நடத்துதல் சிக்கனமாகும். சிக்கன வாழ்க்கை உடையவனே அறவழியில் ஒழுக முடியும். பிறர்க்கு உதவிசெய்ய முன்வர முடியும். நன்மதிப்புடன் வாழமுடியும். பொருள்களை வீணாக்காமல் அளவுபடுத்தி வாங்க முடியும். அப்படி வாங்குவதால் எஞ்சிய பொருள்கள் நாட்டுக்கு மலிவாகக் கிடைத்து ஏனையார் வாழ்க்கையையும் வளம்படுத்தும்.

௯௧. வைப்பு என்பது யாது ?

வருவாயின் அளவுக்குத் தக்கபடி ஒருபகுதி இருப்புப் பொருளாகத் தொகுத்து வைப்பது வைப்பாகும். இவ் வைப்புப் பொருளால் ஒருவனுடைய உள்ளம் உறுதியடையும். வேலையின்மை, நோய், ஏலாமை முதலிய நேரின் அக்காலத்து வேண்டும் செலவுகளுக்கு வைப்புப் பொருளிலிருந்து ஈடுசெய்யலாம். நேராமலிருக்கும் பொழுதும் நேர்ந்தால் என்ன செய்வதென்ற அச்சம் தோன்றுவது இயற்கை. அவ்வச்சத்தை அகற்றுவதும் வைப்புப்பொருளேயாம்.

௯௨. விருந்தோம்பல் என்பது யாது ?

திருந்திய உள்ளத்தினராய் உலகந்திருந்த ஓவாது உழைத்துவரும் உரனுடையாரைப் பேணுதல் விருந்தோம்பலாகும். அவர்களுக்கு அன்புடன் உணவளித்தல் மட்டுந்தான் விருந்தோம்பல் என்பதன்று. அவர்களைப் போல் நடத்தல், அவர்கள் சொல்வழி நிற்றல், அவர்களை மறவாது இருத்தல், அவர்கள் குணங்களைப் பேசுதல் முதலியவைகளும் விருந்தோம்பலேயாகும்.

௧௩. ஈகை என்பது யாது?

தொழிலும் துணையும் இன்றி வருந்திவந்து இரந்தவர்களுக்கு இன்றியமையாத வேண்டுவதொன்றை மனம் உவந்து கொடுத்தல் ஈகையாகும். இரப்போன் குறிப்பறிந்து ஈவதே ஈகை. அவன் கூறியபின் கொடுப்பது அத்துணைச் சிறப்பாகாது. இரத்தலையே தொழிலாகக் கொள்பவர்க்கு ஈதல் ஈகையாகாது. உழைத்துண்டு ஈயவேண்டுமென்னும் உண்மை உணர்வுடையார்க்கு ஈவதே ஈகையாகும். ஈதலின் நன்மை இரப்பார் தாமும் ஈயும் நிலையினராய் உழைத்து உயர்தல்.

௧௪. இன்சொல் என்பது யாது?

துன்புறுகின்றவன் துன்பம் நீங்கி ஆறுதல் எய்தி இன்புற்று வாழத் துணைபுரிவது இன்சொல்லாகும். குற்றம் புரிபவனும் ஏற்றுக் குற்றத்தினின்றும் நீங்கிக் குணம்புரியச் செய்வது இன்சொல். கேட்பவர் எல்லார் உள்ளத்தையும் குளிரச் செய்வது இன்சொல். நாமும் அவ்வாறு பேசவேண்டுமென்னும் விருப்பத்தை எழுப்புவது இன்சொல். தெய்வநினைப்பை ஆக்குவது இன்சொல்.

௧௫. இகழாமை என்பது யாது?

ஏலாமையும் அறியாமையும் உடையவர்களைக் கண்டால் மனமார இரக்கங்கொள்வது இகழாமையாகும். இகழாமையுடையவன் ஏலாதார்க்குத் துணைசெய்து இயலும் நிலையில் கொண்டுவருவன். அறியாமையுடையவர்களின் அறியாமையைப் போக்கி அறிவை விளங்கச் செய்து அறிவுடையராவதற்குத் துணைபுரிவன். பிறர் நிலைகண்டு இகழ்வதால் இகழப்படுபவர் மனம் நொந்து துன்புறுவர். அம்மட்டுமன்று, அந்நிலை அவர்களிடம் நீங்காமல் நிலைத்திருப்பதற்குக் காரணம் நல்லநிலையில்

வாழும் நல்லவர்களே. என்னை? இவர்கள் அவர்களுக்கு வேண்டுந்துணைபுரிந்து தம்மைப்போல் உயர்த்தியிருப்பார்களானால் அவர்களும் இவர்களைப்போல் உயர்ந்தே யிருப்பர். இஃது எதுபோலென்றால் கற்றார் கல்லாதார்க்குத் துணைபுரிந்து அவர்களையும் கற்றாராக்குவதுபோல்.

௧௬. ஒற்றுமை என்பது யாது?

உடலுறுப்புப்போல் மக்கள் அனைவரும் ஒரு குழுவினராக (சமூகம்) வாழ அன்பினால் மனம் ஒருமைப்படுவது ஒற்றுமையாகும். இவ்வொற்றுமைக்குச் சிறந்த காரணம் தாய்மொழியும் தாய்நாடும் என்னும் இரண்டும் முறையே உயிர் உடல்போல் இயைந்து இருக்கின்றன என்று மனங்கொள்வதேயாம். இவ்வொற்றுமையால் வாழ்க்கை உயரும்; வாய்மை பெருகும்; வளஞ் சிறக்கும்; வலிமை மிகும்; அழகு அறிவு ஆற்றல் ஆண்மை பெருமை முதலிய பல நலங்களும் ஓங்கும்.

௧௭. ஒழுக்கம் என்பது யாது?

இடையறாத நேர்மையாக நீர்ஒழுகுவது போன்று நல்ல செயல்கள் எல்லாவற்றையும் கடைப்பிடித்து நடந்துவருவது ஒழுக்கம் ஆகும். மறந்தும் நினைந்தும் தூண்டியும் இடையிட்டும் ஒழுகும் ஒழுக்கம் சிறந்த ஒழுக்கம் எனப்படாது. நல்லொழுக்கங்களைப் பிறர்க்குச் சொல்லியுணர்த்துவதினும் செய்து உணர்த்துவது சாலச் சிறந்தது. ஒழுக்கமே உயர்வுதரும். ஒழுக்கமே உயிர்.

கூட்டுறவினர் ஒழுக்கம்

௧. கூட்டுறவு என்பது யாது?

பலர் ஒன்றுகூடி எச்செயலையும் எளிதாக இயற்றிச் சிறு முயற்சியில் பெரும்பயன் எய்துவதற்குக் காரணமா

யிருக்கும் மனப்பண்பு கூட்டுறவு ஆகும். உலகத் தொழில்துறையும் ஆட்சிமுறையும் கூட்டுறவாலேயே நிகழ்கின்றன. செல்வம் ஆட்சி முதலியவற்றால் உயர்ந்து திகழும் நாடுகளெல்லாம் கூட்டுறவாலேயே உண்டாயின.

௨. கூட்டுறவின் நன்மை யாது?

சிறுமுதல் உடையவர்களும் பல தொழில்களில் பங்கு பெற வாய்ப்பு உண்டாகும். எல்லாத்தொழில்துறைகளிலுமுண்டாகும் பொருள்கள் வாணிபங்கள் தம்மவர்களுக்கு உரியனவே என்ற உயர்ந்த எண்ணம் இயல்பாகவே உண்டாகும். ஒருவனுடைய செல்வமுதலியவற்றைக் கண்டு அழுக்காறு ஏற்படுவதற்கு வழியுண்டாகாது. அழுக்காறு இல்லையாகவே பகையும் இல்லையாகும். பகை இல்லையாகவே ஒற்றுமைவளரும். ஒற்றுமையால் அரிய பெரிய செயல்களை உரியகாலத்து எளிமையாகச்செய்து முடித்துக்கொள்ளலாம்.

௩. கூட்டுறவுச் செய்கை பழங்காலத்தும் உண்டா?

பழங்காலத்தும் இன்றும் பெண்பாலார் உள்பட சீட்டுப் பணம் என வாங்கி நடத்தும் ஒருவகை உதவிமுறை கூட்டுறவேயாகும். காய்கறி முதலிய உணவுப்பொருள்கள்கூட பலர் சேர்ந்து வாங்கிப் பின் கூறுகட்டிப் பிரித்துக்கொள்ளும் வழக்கம் இன்றும் நாட்டில் நின்று நிலவுகின்றது.

௪. கூட்டுறவு முறையை எப்படிக் கையாளுவது?

இளமை முதலாகப் பழகச் செய்வதே நல்லது. தின் பண்டங்கள், பள்ளிக்குவேண்டும் பொருள்கள் முதலியவற்றைப் பல பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து தாங்களாகவே கூட்டாகவாங்கித் தம்மில் பிரித்து எடுத்துக்கொள்ளப்

பழக்குதல் வேண்டும். அதில்வரும் மிச்சத்தையும் அவர்களுக்கு உணர்த்துதல்வேண்டும்.

ரு. பெரியவர்கள் என்ன செய்தல் வேண்டும்?

வேளாண்மை வாணிகம் கைத்தொழில் முதலியவற்றைத் தனிமுறையில் கொள்ளாது கூட்டுறவு முறையில் கைக்கொள்ளுதல்வேண்டும். இவற்றை நடத்தும் முறை ஓர் ஆட்சிமுறைபோன்றே அமைந்திருத்தல்வேண்டும். இவ் ஆட்சிப்பாங்கே அரசியல் ஆட்சிப்பாங்குக்கு அடிப்படையாக அமைதல்வேண்டும்.

௬. வேளாண்மை என்பது யாது?

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள எல்லா உயிர்களும் துப்பாய உணவு உண்ணல் வேண்டும். அதற்கு, நிலத்தைப் பண்படுத்தி உணுமுதல் விளைவித்தல்வேண்டும். அத்தகைய திருத்தொண்டே வேளாண்மையாகும். வேளாண்மை என்னும் சொல் உதவுதல் என்று பொருள்படும். நிலந்தரு செல்வமாகிய உணவுப்பொருள்களை இடை நின்று மக்கட்கு வேண்டுங் காலத்து விருப்புடன் சேர்த்தலே வேளாண்மை.

௭. விலைப்பொருள் எப்படி உதவியாகும்?

விளைபொருள் விலைவரம்பு அற்றது. அப்பொருட்கு யாரும் விலை கொடுத்தல் முடியாது. அப்பொருள் கடவுள் அருளால் ஆவது. கடவுள் அருளை விலைகொடுத்து வாங்குதல் முடியுமா? அதனால், விளைபொருளுக்கு நாம் கொடுப்பது விலை அன்று. அதை நம்மிடம் சேர்ப்பவர்க்கு நாம் கொடுக்கும் கைம்மாறு; அது விலையென வழங்கப் பெறுகின்றது.

௮. வணிகம் என்பது யாது?

பலவேறு இடங்களில் உள்ள பொருள்களை அவ்வப் பொழுது பெற்றுப் பேணித் தொகுத்து வைத்தல்;

வேண்டும் இடங்களுக்குக் கொண்டுபோய் உற்றநேரத்து உதவுதல் ஆகிய இரண்டும் வணிகம் எனப்படும். வணிகம் என்னும் சொல் வண்மை என்று பொருள்தரும். அவர்கள் தரும் பண்டங்களுக்கு நாம் கொடுப்பதும் விலை அன்று; கைம்மாறே யாம். இவ்வுண்மை பழங்காலத்து நிகழ்ந்த பண்டமாற்றால் உணரலாம்.

கூ. கைத்தொழில் என்பது யாது?

உணு முதல்களைச் சமைப்பதும் அதைப் படைப்பதும் அதற்கு வேண்டும் கலம் முதலியவற்றை ஆக்குவதும் கைத்தொழில்களாகும். உடை, அணி, வீடு முதலிய அமைப்பதற்குச் செய்வனவும் கைத்தொழில்களே. இடம் விட்டு இடம் போதற்குவேண்டும் வாய்ப்புகள் ஆக்குவதும் கைத்தொழிலே. மருந்து முதலிய உண்டாக்குவதும் கைத்தொழிலே. பலவகைக் கருவிகள் செய்வதும் கைத்தொழிலே.

கo. கைத்தொழில் செய்வோர் எவ்வாறு இருத்தல்வேண்டும்?

உண்மையும், ஓயா உழைப்பும், தொழிற்பற்றும், நாட்டுப்பற்றும், நன்மதிப்பின் நாட்டமும், ஆக்கிய பொருளை வாங்குபவர்களிடம் ஆரா அன்பும் உடையராகல்வேண்டும். போலி வேலைசெய்யும் புன்மை கனவிலும் தம்மைத் தீண்டாமலிருக்க உன்னிப்பாய் ஒழுகல் வேண்டும். பணத்தினும் பண்பே பல கோடி மடங்கு சிறந்ததென்று பாராட்டி உழைத்தல்வேண்டும்.

கக. வீட்டு வாழ்க்கை என்பது யாது?

வீடு என்பது விடுதல் என்பதாகும். விடுதல் புறத்தே செய்துவந்த தொழில் முதலியவற்றின்கண் நிகழும் உள்ளம் உரை உழைப்பு·ஊர்தி உறவு முதலியவற்றை விட்டு விலகல். விலகவே, வீட்டின்கண் அவற்றைச் செலுத்தி

வாழவேண்டிய கடமைகளை நோக்க வாய்ப்பு நேரிடும். அக்கடமைகளினிடத்து உள்ளம் உரை உழைப்பு மூன் றும் ஒருங்கு நிகழும். அதனால், கொடுத்தலும் துய்த்த லும் ஏற்படும். அதுவே இன்பவாழ்வு ஆகும்.

கஉ. நாடு என்பது யாது?

நாடு என்பது நாடுதல் என்பதாகும். இஃது உள்ளம் புறத்து நாடுதலால் நாடெனப் பெயர்பெற்றது. உழைப் போர், உணர்த்துவோர், உதவுவோர் ஆகிய முப்பாலா ரும் சேர்ந்து வாழ்வதே நாடாகும்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

—திருக்குறள், எ௩௧.

கடவுள் வணக்கச் செய்யுள்கள்

உறுப்பின்பயன் கடவுளைத் தொழல்

க. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே.

குறிப்புரை: வாய் வாழ்த்த, நெஞ்சு நினைக்க, தலை வணங்க ஆண்டவன் நமக்குத் தந்தருளினன். பூக்கொண்டு தூவிப் புகழ்தல் வேண்டும். இம்மூன்றுஞ் சேர்ந்ததற்குத் தொழுகை என்று பெயர்.

தாழ்த்தல்-வணங்கல். சென்னி-தலை.

மறைந்து நிற்றல்

உ. விறகில் தீயின் நன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே.

(கு - ரை.) கடவுள், விறகிலுள்ள தீயும், பாலில் உள்ள நெய்யும், மணியிலுள்ள ஒளியும் அடங்கி மறைந்து நிற்பன போல் உலகு சிற்றுயிர் பேருயிர்களில் மறைந்து அருளுகின்றனன். அன்பாலும் அறிவாலும் வணங்கல் வேண்டும்.

உறவு-அன்பு. உணர்வு-அறிவு.

தொழுந்தகையது

ங. முத்தொப் பானை முளைத்தெழு கற்பக
வித்தொப் பானை விளக்கிடை நேரொளி
ஒத்தொப் பானை ஒளிர்பவ ளத்திரள்
தொத்தொப் பானைக்கண் டீர்தொழற் பாலதே.

(கு - ரை.) அன்பும், ஆற்றலும், அறிவும், செம்மையும் வாய்ந்த செழும்பொருள் கடவுள். முத்து, கற்பகவித்து, விளக்கொளி, பவளத்திரள் போன்று நினைந்து தொழுக.

தொத்து-திரள்.

ஞானவடிவம்

ச. நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுஉன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்தெம் கடவு ளானே.

(கு - ரை.) அறிவு உருவாகிய ஆண்டவன் நிற்பது போன்று காட்டி நிலையாது ஓடும் இயல்புடைய நம் நெஞ்சில் கலந்து நிற்கின்றான். மெய் அன்பர் நினைத்ததை அருள்வான். அவனைத் தொழுக.

கற்பகம்-நினைத்ததைக் கற்பித்துத்தருவது.

பேரொளிவண்ணம்

ரு. தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையும் ஞாயிறுந் தண்மதியும் ஆகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி
நீயாகி நானாகி நேர்மை ஆகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிகள் நின்ற வாறே.

(து - ரை.) கடவுள் அனைத்துமாய் நிற்கின்றான். அவன் வண்ணம் நெடுஞ்சுடர் வண்ணம், அவனை அடிகள் (சுவாமி) என்று அழைப்பர். நேர்மையாக நினைந்து தொழுக.

திண்மை - நிலம். தாரகை - விண்மீன். இரதம் - சுவை யுள்ள சாறு.

வாழ்த்தல்

௬. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

(து - ரை.) ஆண்டவன் ஐம்பூதமாய் உடலுயிராய் அன்பர்க்கு வெளிப்பட்டருள்கின்றான். தலைவனாயிருந்து எல்லாரையும் நடத்துவிக்கின்றான். இப்பொருள்சேர் பெரும் புகழ்களை வாயாரச் சொல்லி வாழ்த்துக.

கோன்-தலைவன். கூத்தாட்டல்-நடத்துவித்தல்.

போற்றல்

௭. மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்து போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவி டேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே.

(து - ரை.) ஆண்டவன் திருவடித்தாமரையை அன்பால் கை தலைமேல் வைத்து இன்பக்கண்ணீர் பெருகிவரப் போற்றி போற்றி எனப் புகழ்ந்து வழிபடுக.

விரை - மணம். கழல் - திருவடி. போற்றி - போற்றப் படுவது.

பல்லாண்டு

அ. மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

(கு - ரை.) நல்ல மனமுடைய மெய்அன்பர்கள் கூட்டமாகக் கூடுவர். தாங்கள் நெடுநாள் வாழவேண்டும் என்னும் கருத்துக் கொள்வர். அதற்குத் துணையாகும்படி ஆண்டவனுக்குப் பல்லாண்டு கூறுவர். என்றும் ஒன்றுபோல் இருக்கும் பொருள் ஆண்டவன்.

பல்லாண்டு-பல ஆண்டு; நெடுநாள்.

கடவுள் ஒருவனே

க. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்க தியில்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

(கு - ரை.) உலகில்வாழ் மக்களெல்லாம் ஒரு குலத்தவரே. கடவுளும் ஒருவரே. துன்பம் இல்லாமல் இன்பமாக இருக்க நினைந்து நிலையாக வழிபடுக.

நமன் - எமன். கதி - நிலை. சித்தம் - மனம். உய்தல் - கடைத்தேறல்.

காவலன்

கO. காலினில் ஊறும் கரும்பினில் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்துநின் றானே.

(த - ரை.) ஆண்டவன் ஒவ்வொரு பொருள்களின் பயனாகக் கலந்து விளங்குகின்றான். இறைவனாக இருந்து என்றும் காக்கின்றான்.

கால்-காற்று. ஊறு—படுதல். கட்டி-வெல்லம்.

மெய்யின்பம்

கக. மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே.

(த - ரை.) மெய்அன்பர்கள் உள்ளத்துள் கலந்திருந்து விளங்குபவன் கடவுள். காலங் கடந்து நிற்பவன் கடவுள். இன்பம் தருபவன் கடவுள்.

மெய்-உள்ளம். ஊழி-காலம்.

துன்பம் துடைப்போன்

கஉ. இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான்—இறைவனே
எந்தாய் எனஇரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்.

(த - ரை.) தோற்றுவித்து மாற்றுவித்துக் காப்பவன் கடவுள். துன்பம் துடைப்பவன் கடவுள் ; பேரிரக்கம்கொள் பவன் கடவுள்.

இறக்கஞ்செய்தல்—மாற்றுவித்தல். எந்தாய் - எமதுதந்தையே.

வைப்பு

௧௩. எனக்கினிய எம்மானை ஈசனை யானென்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று.

(கு - ரை.) ஆண்டவனை மனத்துக்கு இனிய வைப்புப் பொருளாகக் கொண்டேன். கொண்டதனால் பேரின்பம் உற்றேன். ஆண்டவனைச் சார்ந்தவர்களுக்கு அரியது என்று ஒன்றும் இல்லை.

வைப்பு - அழியாத்துணைப்பொருள். பிரான் - தலைவன். அரியது - கைகூடாதது.

அருள்வெளி

௧௪. ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
ஒளியாகி வெளியாகி உருவும் ஆகி
நன்றாகித் தீதாகி மற்றும் ஆகி
நாசமுடன் உற்பத்தி நண்ணா தாகி
இன்றாகி நாளையுமாய் மேலும் ஆன
எந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா ஆகிக்
கடிதினில்வந் தருள்சுரக்கும் கருணை விண்ணே.

(கு - ரை.) எல்லாமாகி இருக்கும் ஆண்டவன் கதறிய கன்றுக்கு அருள் சுரக்கும் ஆன்போன்ற அருட்பெருவெளி.

சேதா - செங்கிறப்பசு. கடிது - விரைவு. கருணைவிண்-அருள்வெளி.

வேண்டுகோள்

கரு. என்னுடை உயிரே என்னுளத் தறிவே
என்னுடை அன்பெனும் நெறியாம்
கன்னல்முக் கனிதேன் கண்டமிர் தென்னக்
கலந்தெனை மேவிடக் கருணை
மன்னிய உறவே உன்னை நான் பிரியா
வண்ணமென் மனமெனுங் கருவி
தன்னது வழியற் றென்னுழைக் கிடப்பத்
தண்ணருள் வரமது வேண்டும்.

(கு - ரை.) ஆண்டவன் உயிராக அறிவாக இன்பமாகக் கலந்து விளங்கும் அருள் உறவு ஆவன். அவனிடமே மனம் தங்கும்படியான வரம் வேண்டுக.

என்னுழை-என்னிடத்து.

வடிவு

கசு. கண்ணில் காண்பதுன் காட்சிகை யால்தொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேநின் அருள்வடி வாகுமே.

(கு - ரை.) ஆண்டவன் தங்கும் வடிவமே ஐம்பூதமும் உயிர்களும் பிறவும். அவன் நினைவுடன் பொருள்களைப் பார்ப்பதும், தொழில் செய்வதும் பூசை ஆகும்.

பகர்வது-சொல்வது.

புண்ணிய நாள்

கஎ. திருந்து சீரடித் தாமரைக்கு
அன்புதான் செய்யப்
பொருந்தும் நாள் நல்ல புண்ணியஞ்
செய்த நாள் பொருந்தாது

இருந்த நாள்வெகு தீவினை
இழைத்தநாள் என்றால்
அருந்த வாவுனைப் பொருந்துநாள்
எந்தநாள் அடிமை.

(கு - ரை.) ஆண்டவன் திருவடிக்கு அன்பு செய்யும் நாள் புண்ணிய நாள். அன்பு செய்யாத நாள் மிகுந்த தீமை செய்த நாள். நினைக்கும் புண்ணியநாளை வேண்டுக.

இழைத்தல்-செய்தல். அருந்தவா-அருமையான தவத்தை யுடையவனே.

கலைமகள்

கஅ. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

(கு - ரை.) ஆழ்ந்து அகன்ற படிப்பும், இன் சொல்லும், பன்மொழியும் அன்பர்க்கு அருள்பவள் கலைமகள். அத் தகைய கலைச்செல்வியைப் பணிக.

தூக்கும் - ஆராயும். பனுவல் - நூல். வாக்கு - சொல். கலாவல்லி - கலைச்செல்வி.

சொற் பொருள்

கக. சொல்லினால் தொடர்ச்சிநீ
சொல்லப்படும் பொருளும்நீ
சொல்லினால் சொல்லப்படாது
தோன்றுகின்ற சோதிநீ

சொல்லினால் படைக்கநீ
 படைக்கவந்து தோன்றினார்
சொல்லினால் சுருங்கநின்
 குணங்கள் சொல்லவல்லரே.

(கு - ரை.) சொல்லும் பொருளுமாய் விளங்கும் ஆண்டவன் குணங்கள் சொல்லினுள் அடங்கா. அவனைப் பேரொளிப் பிழம்பாக வழிபடுக.

தொடர்ச்சி - சொல்தொடர்தல்.

தமிழ்மாலை

உ೦. யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
 யானே தவமுடையேன் எம்பெருமான்—யானே
 இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
 பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

(கு - ரை.) இனிய தமிழ்ப்பாமாலை பாடி ஆண்டவன் திருவடிக்குச் சாத்துதல் பெருந்தமிழ் நன்மக்களின் அருங் கடன். பாமாலையே வழிபாட்டில் சிறந்ததும் நிறைவுறுவதும் ஆகும்.

இணையடி - இரண்டு திருவடி.

தொழுதல்

உக. உயர்வற உயர்நலம் உடையவன் எவன்அவன்
 மயர்வற மதிநலம் அருளினன் எவன்அவன்
 அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்அவன்
 துயரறு சுடரடி தொழுதெழுஎன் மனனே.

(கு - ரை.) ஆண்டவன் ஈடும் எடுப்புமில்லாப் பீடுறு பெருநலம் உடையவன். அறிவுவிளக்கம் அருளும் தலைவன். அவன் ஒளியடியை வழிபடுக.

உயர்வற-தானே உயர்ந்த. மயர்வு-அறியாமை. அயர்வு-சோர்வு. அதிபதி-தலைவன், அவன்-கடவுள்.

எண்ணல்

உஉ. யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றி லாத
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே.

(கு - ரை.) ஆண்டவன் அவரவர்கொள்ளும் நற் கொள்கை (சமயம்)க்கு ஏற்றவாறு வெளிப்பட்டருள்வன். அவன் எண்ணவும் நண்ணவும் சொல்லவும் ஒண்ணாத வண்ணத்தன். அவனை அறிவின்கண் எண்ணுவார் அடைவர்.

புலன் ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி. பாவனை- நினைப்பு; எண்ணம்.

வீடு

உங. நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம்ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கு இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே.

(கு - ரை.) ஆண்டவன் அருள் நினைவால் இருவினையும் மலப்பற்றும் நீங்கும்; பேரறிவு விளங்கும்; அதுவே பேரின்பம்.

இந்திரியம்-பொறி. வீடு-பேரின்பம்.

தலைவர்

உச. உலகம் யாவையுந் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

(கு - ரை.) ஆண்டவன் திருவிளையாட்டாக முத்தொழில் புரிபவன். அவனே எல்லார்க்குந் தலைவன்; அவன் திருவடியே புகலிடம்; அதைத் தொழுக.

இன்சுவை

உரு. வானேஅவ் வானுலவுங் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரில்
தானேயும் புவியேஅப் புவியில் தங்கும்
தாபரமே சங்கமமே சாற்று கின்ற
ஊனேநல் உயிரேஉள் ஒளியே உள்ளத்து
உணர்வேஅவ் உணர்வுகலந் தூறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
இன்சுவையே சுவைஅனைத்துந் திரண்ட தேவே.

(கு - ரை.) எல்லாமாக இருக்கின்றான் ஆண்டவன். உள்ளொளியும் அவன். மிகுந்த இன்சுவைப் பொருளும் அவனே.

தாபரம்-நகராத பொருள். சங்கமம்-நகரும் பொருள்.

சொல்லொணாதது

உசு. தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனாய் எவ்வெவைக்குந் தலைவன் ஆகி
வானாகி வளியனலாய் நீரும் ஆகி
மலர்தலைய உலகாகி மற்றும் ஆகித்

தேனாகித் தேனினறுஞ் சுவையதாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடுகின்ற
நானாகி என்இறையாய் நின்றாய் நின்னை
நாயடியேன் எவ்வாறு நவிற்றும் ஆறே.

(கு - ரை.) ஆண்டவன் எல்லாவற்றுடனும் கலந்து நிற்கின்றான். அவற்றுக்குத் தலைவனாயமர்ந்து அவற்றை இயக்குகின்றான்,

வளி-காற்று. மலர்தலை-விரிந்த இடம். இறை-கலந்துறைபவன். நவிற்றுதல்-சொல்லுதல்.

அழுக்கற்றவன்

உஎ. என்னார் உயிருக் குயிரனையாய் என்னைப்
பொருளாய் எண்ணி மகிழ்ந்து
அந்நாள் அடிமை கொண்டளித்தாய்
ஆர்க்கோ வந்த விருந்தெனவே
இந்நாள் இரங்கா திருக்கின்றாய்
எங்கே புகுவேன் என்புரிவேன்
நின்னால் அன்றிப் பிறர்தம்மால்
வேண்டேன் ஒன்றும் நின்மலனே.

(கு - ரை.) ஆண்டவன் உயிருக்கு உயிராய் நிற்கின்றான். அவனே அழுக்கற்றவன். அவன் எல்லாரையும் ஆட்கொள்கின்றான். வேண்டுவன அவனிடமே வேண்டிப் பெறுக.

புரிதல்-விரும்பிச் செய்தல். நின்மலன்-அழுக்கற்றவன்

பேரிரக்கம்

உஅ. கல்வியெலாங் கற்பித்தாய் நின்பால் நேயங்
காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே
ஒல்லும்வகை அறிவித்தாய் உள்ளே நின்றென்
உடையானே நின்னருளும் உதவுகின்றாய்

இல்லையெனப் பிறர்பாற்சென்று இரவா வண்ணம்
ஏற்றமளித் தாயிரக்கம் என்னே என்னே
செல்வஅருட் குருவாகி நாயி னேனைச்
சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே.

(து - ரை.) ஆண்டவன் வேண்டுவ கற்பிக்கின்ருன்; உதவுகின்ருன்; குருவாக வந்து ஆட்கொள்கின்ருன்.

நேயம்- அன்பு.

துணை

உக. ஈன்றநல் தாயும் தந்தையும் குருவும்
என்னுயிர்க் கின்பமும் பொதுவில்
ஆன்றமெய்ப் பொருளே என்றிருக் கின்றேன்
அன்றிவேறு எண்ணிய துண்டோ
ஊன்றிய பாத மறியநான் அறியேன்
உறுகணிங்கு ஆற்றலேன் சிறிதும்
தோன்றிஎன் உளத்தே மயக்கெலாம் தவிர்த்துத்
துலக்குதல் நின்கடன் துணையே.

(து - ரை.) ஆண்டவன் தாய் தந்தை குருவாக நின்று எல்லார்க்கும் துணைசெய்கின்ருன். அவன் அருள்துணையை நாடுக.

அப்பால் நிற்பவன்

௩0. திருவந்த தொல்லைப் புவனத்தொடு
தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய்து அறிதற்கரும்
பெற்றி எய்தி
அருவந் தனையும் உருவத்தையும்
அன்றி நின்ருன்
ஒருவன் தனது பதந்தன்னை
உளத்துள் வைப்பாம்.

(கு - ரை.) பழைமையாய உலகத்து எல்லாராலும் வணங்கப்படுபவன் கடவுள். அவன் அருவம் உருவம் என்னும் நிலைக்கு அப்பாற்பட்டவன். அவன் திருவடியை வணங்குக.

தொல்லை-பழைமை. புவனம்-உலகம். வந்தனை-வணக்கம். பெற்றி-தன்மை. பதம்-திருவடி. உளம்-மனம்.

கலைஅமிழ்து

௩௧. அலகிலாக் கருணை என்னும்
அந்தளிர் ஈன்று தொல்லை
உலகெலாம் பூத்துக் கங்கை
உவட்டெடுத்து ஒழுகுஞ் சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை
மரகதக் கொடியை ஞானக்
கலையமு தொழுகு தீஞ்சொல்
கனியினைக் கருத்தில் வைப்பாம்.

(கு - ரை.) உலகத்தை அருளால் படைத்துக் காக்கும் பச்சைநிறம் வாய்ந்த கலைஅமிழ்தச் செல்வியை வணங்குவோம்.

அலகிலா-அளவில்லாத. ஞானம்-அறிவு. கனி-செல்வி.

ஒன்றுபோல் இருப்பவன்

௩௨. ஆதியும் நடுவும் ஈறும்
அருவமும் உருவும் ஆகும்
பேதமும் அளவும் இன்றிப்
பேரறிவு உருவும் ஆகி
வேதமும் உணர்வும் எட்டா
விமலமாய் நிறைவ தாகிச்
சாதலும் பிறப்பும் அற்றோர்
தன்மையாம் பதியின் தன்மை.

(து - ரை.) கடவுள் அறிவாய் எங்கும் நிறைந்திருக்கின்ருன். சாதல் பிறப்பு இல்லாதவன்; என்றும் ஒன்றுபோல் இருப்பவன் கடவுள்.

விமலம்-அழுக்கின்மை. பதி-கடவுள்.

உணர்வு

௩௩. உலகம் மூன்றும் ஒருங்குணர் கேவலத்து
அலகி லாத அனந்த குணக்கடல்
விலகி வெவ்வினை வீடு விளைப்பதற்கு
இலகு மாமலர்ச் சேவடி ஏத்துவாம்.

(து - ரை.) எல்லாம் ஒருங்கு உணர்பவன் கடவுள். அவனை வினை நீங்கி வீடுபேறு எய்த வழிபடுக.

கேவலம்-தனிமை. அலகிலாத-அளவிலாத. இலகுதல்-விளங்குதல்.

நிறைபேரொளி

௩௪. பூதபௌ திகங்க ளாய
புவனகோ சரங்கட் கெல்லாம்
ஆதியாய் முதுமூ லத்துக்கு
அநாதியாய் அகண்டா கார
சோதியாய் விளங்கி நிற்குந்
தூயசை தந்ய வாழ்வைக்
காதலாய்ப் பரவி நாளுங்
கருத்தினுள் இருத்தி வாழ்வாம்.

(து - ரை.) காணப்படும் உலகங்கட்கெல்லாம் காரணன் கடவுள். அவன் எங்கும் நிறைந்த பேரொளியாய் விளங்குகின்ருன். அவனை நினைந்து வாழ்வோமாக.

அநாதி-பழைமை. சைதந்யம்-அறிவு.

பெரும்பேறு

௩௩. சாகாமல் செத்திருக்குஞ் சற்குருவின்
குணங்குடியைச் சார்ந்தோம் ஆகில்
சாகாமல் செத்திருக்கும் சாயுச்சிய
பதந்தருஞ்சாட் சாதி யார்க்கும்
சாகாமல் செத்திருக்கும் தன்மயத்தோர்க்கு
உற்றபெருந் தகையுங் காட்டும்
சாகாமல் செத்திருக்கும் உத்தியுஞ்சித்
தித்திடுங்காண் தனக்குத் தானே.

(கு - ரை.) உலகியல் உணர்வு நீங்கி ஆண்டவன் உணர்வாய் வாழ்பவர் பெரும்பேறும் வேறிலா நிலையை அடைவர்.

சாயுச்சியம் - வேறிலாப் பெரும்பேறு. தன்மயத்தோர் - இயல்பினர். உத்தி - சேர்க்கை.

கருத்தன்

௩௪. திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்
மறந்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத்து உறைந்தபல் உயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

(கு - ரை.) கடவுள் எல்லா வகையிலும் சிறந்தவனாக இருக்கின்றான். அவனை உள்ளத்தில் வைத்து ஓவாது எண்ணுதலே சிறந்தது.

பெருந்தலம்-பேருலகம்.

அனைத்தும் கடவுள்

௫எ. அறக்கடல் நீயே அருட்கடல் நீயே
அருங்கரு ணாகரன் நீயே
திறக்கடல் நீயே திருக்கடல் நீயே
திருந்துளம் ஒளிபட ஞான
நிறக்கடல் நீயே நிகர்கடந்து உலகில்
நிலையும்நீ உயிரும்நீ நிலைநான்
பெறக்கடல் நீயே தாயும்நீ எனக்குப்
பிதாவும்நீ அனைத்தும்நீ அன்றோ.

(கு - ரை.) அறம், அருள், அளி, வலிமை, செல்வம், அறிவு, ஒப்பின்மை, உலகு, உயிர், தாய், தந்தை முதலிய எல்லாமாய்க் கலந்து நிற்பவன் கடவுள்; அவன் திருவடியைப் பெறுதலே கடமை.

கருணை - அளி.

காப்பு

௫அ. நீயேஎன் தந்தை அருளுடை
யாய்எனை நேர்ந்துபெற்ற
தாயேநின் பாலிடத் தெம்பெரு
மாட்டிஇத் தன்மையினால்
நாயேன் சிறிதும் குணமிலன்
ஆயினும் நானும்உங்கள்
சேயே எனைப்புறம் விட்டால்
உலகம் சிரித்திடுமே.

(கு - ரை.) கடவுள் தந்தையும் தாயுமாக இருக்கின்றான். உயிர்களெல்லாம் அவன் மக்கள், பிழைபொறுத்துக் காக்கவேண்டுவது அவன் கடன்.

பால்-பக்கம். பெருமாட்டி - பெருந்தன்மையுடையவள்.
சேய்-பிள்ளை.

பெருந்திரு

௩௯. கரியார் அளகமும் கண்ணுள்
 கதிர்செய் கலனுஞ்செய்ய
சரியார் கரமும் பதமும்
 இதழும் தவளநறும்
புரியார்ந்த தாமரை யுந்திரு
 மேனியும் பூந்துகிலும்
பிரியாதென் நெஞ்சினும் நாவினும்
 நிற்கும் பெருந்திருவே.

(கு - ரை.) கலைமகள் மெய்யன்பர் உள்ளத்திலும், நாவிலும் கலந்து நின்று அருள்புரிவாள்.

அளகம்-கூந்தல். சரி-சரிவு; மகளிர் முன்கை அணி. தவளம்-வெண்மை. பெருந்திரு-கல்விச்செல்வம்.

நலமும் இன்பமும்

௪0. கோடையிலே இளைப்பாற்றிக்
 கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே
 நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற
 தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த
 சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற
 மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே
 சுகத்திலுறும் பயனே

ஆடையிலே எனைமணந்த
மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன்
அலங்கல்அணிந் தருளே.

(து - ரை.) ஆண்டவன் உலகிடை நலமும் இன்பமும் ஆகக் காணவும் கருதவும் நுகரவும் பெறும் எல்லாப் பொருளு மாய்க் கலந்து நிற்கின்றான். அவனே தலைவன்; அவனுக்குத் தமிழ்மாலை பாடிச் சாத்தி வழிபடுக.

உகந்த-உயர்ந்த. சுகம்-நன்மை. சுகம்-இன்பம். பயன்-மனத்தூய்மை.

இணையடி

சச. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

(து - ரை.) ஆண்டவன் இன்னிசையாய்க் குளிர்நில வாய் உயிர்க்காற்றாய் இனிய பருவமாய் நறும்புனலாய் நல மும் இன்பமும் அருளுகின்றான். அவன் திருவடியை வழுத்துக.

வீணை-இசைக் கருவி. மூசு-மொய்த்து. இணை-இரண்டு.

எண்ணெழுத்திறை

சஉ. மண்ணாகி விண்ணாகி மலையும் ஆகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே ஆகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் அணியும் ஆகிக்
கலையாகிக் கலைஞானந் தானே ஆகிப்

பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணும் ஆகிப்
பிரளயத்துக் கப்பாலோர் அண்டம் ஆகி
எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்தும் ஆகி
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற ஆறே.

(கு - ரை.) ஆண்டவன் எல்லாமாய்க் கலந்து நிற்கின்றான். எண்ணும் எழுத்தும் அவனே. பேரொளியாகிய பெரும் பொருளும் அவனே.

பிரளயம்-உலகமுடிவு. எழுஞ்சுடர்-தானாகத் தோன்றும் பேரொளி.

புகழ்

௪௩. சுவையே ஊட்டி அளிப்போய்நீ
தொல்நோய் மாற்றும் மருந்தோய்நீ
நவையே நீக்கிக் களிப்போய்நீ
நசையே ஆற்றும் இனியோய்நீ
அவையே புகழின் உயர்ந்தோய்நீ
அமரர் புகழப் படுவோய்நீ
இவையே உண்டாய்ப் பின்னுலகுன்
இணைத்தாள் பணியா ஆறென்னே.

(கு - ரை.) ஆண்டவன் உடல் பொருள் ஊண் மகிழ்ச்சி இனிமை எல்லாமாய் நிற்கின்றான். அவனே பொருள்சேர் புகழுக்கு உரியவன். அவன் திருவடியைத் தொழு.

தொல்நோய் - அறியாமை. நவை - குற்றம். களிப்பு - மகிழ்ச்சி. நசை-விருப்பம். பணிதல்-வணங்கல்.

வாசகம்

௪௪. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத்து இருப்பாள்

உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உண்ணின்று ஒளிர்வாள்
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருள் ஆவாள்.

(கு - ரை.) வெண்டாமரை, வீணையிசை, பாட்டு, பாடுவார் உள்ளம், மறை, மந்திரம் முதலிய தெய்வ நிலயங்களில் கலைமகள் விளங்குவாள்.

கொள்ளையின்பம்-அளவிலாத இன்பம். கவிதை-பாட்டு. வேதம் - மறை. முனிவர் - நீத்தார்; பிறர்க்கெனவாழ்வோர். வாசகம்-மந்திரம்.

ஒளி

சரு. எழுந்தன உயிரின் கூட்டம்
இருளில்லை அயர்வும் இல்லை
எழுந்தன ஒளியே எங்கும்
எங்கணும் உணர்ச்சி வெள்ளம்
பொழிந்தநின் கதிரொவ் வொன்றும்
பொலிந்தேறி மேற்றி சைமேல்
கொழுந்தோடக் கோடி வண்ணம்
கொழித்தது சுடர்க்கோ மானே.

(கு - ரை.) ஒளியால் இருளகலும்; அறிவும் பொருளும் விளங்கும். உணர்ச்சி பெருகும். அவ்வொளி ஆண்டவன் அருளே.

நிலயம்

சசு. எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவரவர் உளந்தான் சுத்த

சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெளிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தை மிக விழைந்த தாலோ.

(கு - ரை.) ஆண்டவன் தங்கும் நிலையம் எல்லாவுயிரும் தம்முயிர்போல் எண்ணும் மெய்யன்பர்களின் தூய உள்ளம்.

கேடா இன்பம்

சஎ. மூவா முதலா உலகம் ஒரு
மூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது
தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத்தொள்
நிதிச் செல்வன் என்ப
தேவாதி தேவன் அவன்சேவடி
சேர்தும் அன்றே.

(கு - ரை.) ஆண்டவன் ஒப்பில்லாத இன்பம் உடையவன். அவ்வின்பத்தின் பொருட்டு இயல்பாகவே விளங்கும் மூன்றுலகத்துள்ளாரும் தொழுவர்.

மூவா-கெடாத. முதலா-தோன்றாத.

பெருந்தேன்

சஅ. நினைத்தனை உள்ளதோர்
பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக
ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பி.

(கு - ரை.) ஆண்டவன் உவட்டாத அழியாத இன்பத் தேன். அவனை நினைப்பினும், அவன் திருவுருவைக் காணினும், அவன் திருப்புகழைப் பேசினும் உள்ளுருக வெள்ளத் தேன் பொழியும்.

ஆனந்தம்-இன்பம். குனிப்பு-கூத்து.

திருவுரு

சக. அன்றும் திருவுருவம்
காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம்
காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான்
என்பார்கட்கு என்உரைக்கேன்
எவ்வுருவோ
நின்னுருவம் ஏது.

(கு - ரை.) ஆண்டவன் திருவுரு அளக்க ஒண்ணாதது. அவன் பேரின்பத்தை அடைந்தவர் அளக்கவும் நினையார். காண்பன எல்லாம் அவன் திருவுரு.

காணாது-அளந்தறியாது. ஆட்படுதல்-இன்பம் எய்துதல்.

கவி

௫0. படிக நிறமும் பவழச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

(கு - ரை.) அறிவின் நிறமாகிய வெண்மையே கலைமகளின் நிறம். அவளை இரவும் பகலும் இடையறாது போற்றக் கல்வி எளிதாகவரும்.

படிகம்-வெண்பளிங்கு. அனவரதம்-எப்பொழுதும்.

க. வி.—6

குலதெய்வம்

௩௧. எங்கும் நிறையும்நீ எனக்குள்ளேக் காட்டாய்
ஈதென்ன கண்கட்டு மாயமோ
அங்கும் இங்கு மேஉனைத் தேடி
அலையவைத் தாய் இது ஞாயமோ
தங்குப தேசம் செய்யா யின்னம்
தான்அடி யேன்சிறு பிராயமோ
எங்குல தெய்வமே தாயே தந்தையே
இதுதான் புத்திர நேயமோ.

(த - ரை.) ஆண்டவன் எங்கும் நிறைந்தவன். மக்கள் அன்பு பூண்டவன். அவனே குலதெய்வம்; அவனைத் தொழுக.

ஒழுக்கம்

௩௨. பண்ணோன் துதியே படியேன் விழியே
கண்ணே மணியே கநியே நிதியே.

(த - ரை.) ஆண்டவனைப் புகழ்தலும் ஒழுக்கநூல் கற்றலும் தெய்வ வழிபாடு ஆகும்.

புகழுரிமை

௩௩. நாதனைப்பேசிடும் நாவினால்அற்ப
நரஸ்துதி பாடாதே—நாளும்
நானெனதென்றபி மானம்பிடித்துநீ
நாடெங்கும் ஓடாதே.

(த - ரை) ஆண்டவனைப் புகழ்ந்து பாடுவதே அறிவு. செருக்கு அறுதலே இன்பம்.

அறிவன்

௫௪. மணியிலகு செறிதளிரொ டலர்ஒளிய
நிழலரசின் மருவி அறவோர்
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட
உரைஅருளும் பெரிய அருளோன்
துணியிலகு சுடருடைய அரசரொடு
பிரமர்தொழு தலைமை யவர்மா
அணியிலகு கமலமலர் அனையஎழில்
அறிவனிணை அடிகள் தொழுவாம்.

(கு - ரை.) மெய்யுணர்வுக் குறியாம் அரசமரத்தடியில் வீற்றிருந்தருளி உலகியல்துன்பும் பிறவியும் போக்க நல்லற முரைப்போன் அறிவன். அவன் அடியிணையைத் தொழுக.

உரை—நல்லறம்.

தவம்

௫௫. வாய்மையும் அறமும் பிறர்துயர் களையும்
வண்மையும் தியாகமும் இளைதீர்
தூய்மையும் ஒழுங்கும் கலியினில் வளர்ந்து
துலங்கிடத் திமையும் துயரும்
சேய்மையுற் றகலத் தோன்றிய கருணைச்
செங்கதி ரவனெனத் தகைய
தாய்மையன் பினனை யின்றபா ரதத்தாய்
தாள்மலர் பணிவதே தவமாம்.

(கு - ரை.) பிறர்க்கெனவே வாழும் பெரியவர்களைப் பெற்றருளிய பேராற்றலாம் பாரதத்தாயை வணங்குவது தவம்.

முறையருள்வோன்

௯௪. அருந்துணையே அறமுடையார்க்கு அகமுருகி
நினைத்தடியார் அழைக்கும் போது
வருந்துணையே மதிபொரு வஞ்சனையில்
வாதுழைப்பார் மதிக்குங் கூலி
தருந்துணையே சகலருக்குந் தகைபொருந்த
அருள் நீதி தழைக்கும் தெய்வப்
பெருந்துணையே பெருநிதியே இடங்காலம்
இறப்பில்லாய் பிறப்பில் லாயே.

(கு - ரை.) கடவுள் இடத்துக்கும் காலத்துக்கும் அப்பால்பட்டவன்; பிறப்பு இறப்பு இல்லாதவன். அவனை அனைவரும் தொழுக.

நன்றி

௯௭. உடம்பளித்தாய் உயிரளித்தாய் உணர்வளித்தாய்
உறவளித்தாய் உயிர்வாழ் தற்கே
இடம்படைத்தாய் பொருள்படைத்தாய் [மெய்யில்
எண்ணுவதை இயற்றஎன்னுள் இடத்தில்
திடம்படைத்தாய் ஐம்பொறியின் திறம்படைத்தாய்
மறைந்துனையே தேட வைத்தாய்
கடம்படைத்த கருணையினுய் கருதினுனக்கு
எத்நன்றி காட்டு வேனே.

(கு - ரை.) உடம்பு, உயிர், உணர்வு, உறவு, இடம், பொருள் முதலியன அருளால் படைத்தளித்தவன் கடவுள். அவனுக்குச் செய்யும் நன்றி தொழுகை. அந்நன்றியைச் செய்க.

உள்ளக் கசிவு

௯௮. பசியின்றி உணவில்லை பாடில்லை
சுகமில்லை பாடில் லாதே
நிசியின்றி உதிப்பில்லை சலிப்பின்றி
நினைப்பில்லை நிகழ்ச்சி யில்லை

நசிவின்றி வசிப்பில்லை வசிப்பின்றி
வாழ்விலுறும் நன்மை யில்லை
கசிவின்றிக் கடவுள்பதங் கருதலில்லை
வருதலில்லை கருணை தானே.

(கு - ரை.) பசியினலேயே உண்பதும் உழைப்பதும் உண்டாகின்றன. அதுபோல் உள்ளக்கசிவினல் ஆண்டவன் அருளும் அடியிணையும் கிடைக்கும். கசிந்து தொழுக.

ஏத்துதல்

௫௧. என்னை நீ அறிவாய் உன்னை நான் அறியேன்
என்னை நான் அறிந்திடின் அல்லால்
உன்னை நான் அறிய ஓர்வழி யுளதோ
உரைமனங் கடக்கின்ற ஒன்றே
முன்னையோர் அறிஞர் முனிவர்மந் திரத்தார்
முயன்றறி யாவுனை எளியேன்
பொன்உயிர் கண்ணென்று ஏத்தல்அல்லால்மற்று
உரையிலேன் புரையிலா மணியே.

(கு - ரை.) ஆண்டவன் நம்மை எல்லாம் அறிகின்றனன். நாம் அவனை அறியாமல் இருக்கின்ருேம்; ஆயினும், பொன்னே, உயிரே, கண்ணே எனப் புகழ்ந்து போற்றுக.

மனம்—நினைப்பு. புரையிலா—குற்றமில்லாத.

நல்நெறி

௫௨. வேண்டாமை வேண்டுதல் இல்லானைப்
போற்றி விசனம்ஒன்றும்
தீண்டாமை வேண்டுகின் ருேர்மன்
னுயிர்நலம் சேர்நெறியைத்

தாண்டாமை வேண்டவேண் டாமோ
தனிப்பெரும் தாரணியை
ஆண்டான் ஒருவர்பங் கன்று
என் றறித்தன் படைதல்நன்றே.

(கு - ரை.) விருப்பு வெறுப்பு அற்றவன் கடவுள். நல்ல நெறியில் ஒழுகினால் அவனை அடையலாம். அவன் எல்லாருக்கும் உரியவன். அவனைத் தொழுக.

கைமேல் இன்பம்

கக. கரும்பருந்தும் கூலியதன் கையோடே
கிடைப்பதுபோல் கடவுள் பாதம்
விரும்பிநினை யும்பொழுதே விரும்பிவரும்
நலங்கள்அருள் மெய்யுள் ளார்பால்
திரும்பிவரும் பொழுதுபுறம் திரும்பிவிடும்
இடர்கண்ணிர் தெய்வம் எண்ணி
அரும்பிவிழும் பொழுதுநம தரும்பாவம்
அழலகப்பட் டவிந்து போமே.

(கு - ரை.) கரும்பு தின்பார்க்கு இன்பம் உடன் கிடைப்பதுபோல், கடவுளைத் தொழுவார்க்கும் மெய்யின்பம் கைமேல் கிடைக்கும்.

நண்ணத்தக்கார்

கஉ. பெண்ஆண்ஆய, விண்ணோர் கோவை,
நண்ணுதாரை, எண்ணேம் நாமே.

(கு - ரை.) 'வெப்பதட்பம் ஆற்றல் மிளிர்செம்மை நீலம் தீ, அப்பனொடு அம்மை அறி' என்பதற்கிணங்க ஆண்டவன் ஆண் பெண் உருவினன்; அவனைத் தொழுவாரையே நாம் சேர்வோம்.

செய்யுள் முதற்குறிப்பு

[எண் - பக்கம்]

எடுத்தாண்ட நூல்களும் செய்யுள் எண்ணும்

கழக வெளியீடு—௫௮௪

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, :: MADRAS - 1.

Head Office:

24, EAST CAR STREET, :: THIRUNELVELI.

விலை அணா 8.

அப்பர் அச்சகம், சென்னை-1.